ஸம்புடம் 2. பரிதாபி சித்திரைமீ ஸஞ்சிகை 3

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

என்னும்

# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபையின் காரியதரிசியால்,

ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

வருஷம் 1-க்கு கட்டணம் ரூ. 2-0-0.] [ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 3.

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

**Vol. 2 – No. 3.**

*April 1912.*

*Editor.*—S. Vasudeva Chariar, B.A., L.T.

பரீதாபி௵ சித்திரை௴

## விஷய ஸூசிகை.

பக்கம்.

1. விஶிஷ்டாத்வைதம்
   பத்ராதிபர் ... ... ... ... 89.
2. ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ
   ஸ்ரீமாந் சே. நரஸிஹ்மாசாரியர் ... ... 100.
3. லக்ஷ்மணனுடைய நிஷ்டை
   ஸ்ரீமாந். எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... 106.
4. பீஷ்மர்
   ஓர் பௌராணிகன் .. ... ... .. 111.
5. கேவல ஆசாரம்
   ஓர் வைதிகன் ... ... ... ... ... 119.
6. கடிதங்கள் ... ... ... ... ... 123.
7. பிரிவுகளின் அறிக்கை ... ... ... ... 128.
8. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 130.

*Copy-right reserved.*

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ சித்திரைமீ. [ஸஞ்சிகை 3.

## விஶிஷ்டாத்வைதம்.

### 8. ஸ்ரீ வைகுண்டம்.

சென்ற ஸஞ்சிகையில் 'பரதத்வமென்னும் ஸர்வேஶ்வரன் ஸமஸ்தமான ஜகத்தையும் உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு, அநேக விதமாக ஆவிர்ப்பவித்து நிற்கிறான்' என்று சொல்லப்பட்டது. "ஆஶ்ரிதர் பலபிறப்பும் பிறவாதபடி தான் எந்தெந்த யோநியிலும் பிறக்கக்கடவனாய், அவர்கள் நாட்டில் பிறந்து படுமவை படாமைக்காகத் தான் பிறந்து படாதன படக்கடவனாய்" இருக்கிறான் புருஷோத்தமன் என்று ஆசார்யர்களின் அருளிச்செயல். இதுமாத்திர மன்று. "யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந" என்கிறபடி நினைந்த எல்லாப் பொருள்களுக்கும் வித்தாகவும், "ந ததஸ்தி விநா யத்ஸ்யாத் மயா பூதம் சராசரம்" என்கிறபடியே ஸர்வவஸ்துக்களிலும் அந்தராத்மாவாகவும் பகவான் இருக்கிறானென்றும் நமது ஆப்தர்கள் சொல்லுகிறார்கள். இப்படி அந்தராத்மாவாக எப்பொழுதும் நமது

ஹ்ருதயத்தில் அவன் இருக்கையிலும், நாம் அவனை அறியாதவர்களாய் அலைவது மிகுந்த வருத்தத்திற்குக் காரணமே. ப்ரஜைகள் இவ்வளவு குருடர்களாகத் தங்கள் ஶ்ரேயஸ்ஸை அறியாமல் ஸம்ஸாரத்தில் உழல்வதைப் பார்த்து ஶ்ருதியே வருந்துகின்றது. "𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯 𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌸𑌂𑌚𑌰𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌯𑍁𑌃 𑌏𑌵𑌮𑍇𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿; 𑌅𑌨𑍃𑌤𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌢𑌾𑌃". பூமியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நிதியை நிதியுடன் கூடிய க்ஷேத்ரங்களின் ஸ்வபாவமறியாத ஜநங்கள் அந்த நிதியின்மீது எத்தனை தடவை ஸஞ்சரித்த போதிலும் அதை எப்படி அடைய மாட்டார்களோ, அப்படியே இந்த ப்ரஜைகள் ஹிரண்யநிதி போன்ற பரமபுருஷன் பேரில் ஸர்வ காலத்திலும் இருக்கையிலும் அவனை அறியாமலும் அடையாமலும் நாஶத்தை அடைகிறார்கள். அந்ருதம் என்னும் கர்மபந்தம் அவர்களை அப்படி மோஹிப்பித்துவிடுகிறது.

இப்படி அளவில்லாத கருணையுடன் ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தமாகவே பலவிதமாக ஆவிர்ப்பவித்து நிற்கும் பகவாந் ஒரு ஸ்தாந விஶேஷத்தில் விஶேஷித்து இருப்பதாகவும், பகவத் கடாக்ஷத்தால் ஸம்ஸார பந்தத்திலிருந்து நிவ்ருத்தியை அடையும் சேதநரெல்லாரும் அந்த ஸ்தாநத்திற்குப் போய் ஶாஶ்வதமாகப் பரமமான ஆநந்தத்தை அநுபவிப்பதாகவும் நமதுஸித்தாந்தம் சொல்லுகின்றது. அதைக் கொஞ்சம் விசாரிப்போம்.

அந்த ஸ்தாநத்திற்கு ஸ்ரீ வைகுண்டம் என்று பெயர். இதன் ஶப்தார்த்தமாவது:—வடமொழியில் "𑌕𑍁𑌠𑌿" என்று ஒரு வினை உண்டு. அதற்கு '𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑌂' அதாவது - 'ஜ்ஞாநத்தைத் தடுப்பது' என்று பொருள். அப்படி ஜ்ஞாநத்தைத் தடுக்கக்கூடிய கர்மப்ரஸங்கமற்று இருக்கும் நித்ய ஸூரிகள் விகுண்டர்களாவார். அவர்களுடைய ஸம்பந்தத்தால் வைகுண்டம் என்னும் பதம் இந்த ஸ்தாந விஶேஷத்தைக் காட்டு

கின்றது. அது, சுத்தஸத்வம் என்னும் த்ரவ்யத்தால் அமைந்து நிற்கும்; "சேணுயர் வானம்" என்றும், "தெளிவிசும்பு" என்றும், "பொன்னுலகு" என்றும் சொல்லப்பட்ட வேறுபாட்டை யுடைத்தாய், ப்ரஹ்மாதி பதங்களெல்லாம் நரகதுல்யங்களாய்த் தோற்றும்படி அளவற்ற ஐச்வர்யங்களான போக்ய போகோபகரண போகஸ்தாநங்களுடன் கூடியது. அதன் இருப்பிடம்-பலகோடிக் கணக்காக இருக்கும் அண்டங்களும், அவைகளைத் தனித்தனியே சுற்றிநிற்கும் ஜலம் முதலாக ப்ரதாந தத்வமளவான ஆவரணங்களும், ஆகிய இவை யெல்லாவற்றிற்கும் அப்பால் வெளியில் இருக்கின்றது. அதற்குப் பரம்பதமென்றும் பெயருண்டு. எங்கே போனால் திரும்பிவருவதென்பது இல்லையோ அது பரம் என்று, பரசப்தத்தின் அர்த்தம். "ஸம்ஸாராவ்ருத்திரஹிதம் ஸுகாஸ்பதம் சோகதுஃகாதி ஹீந:". அதாவது - அங்கே போனவர்களுக்கு சோகம், வ்யதை, அவ்விடத்திலிருந்து நழுவுதல் முதலியவை கிடையாது. அதன் தேஜஸ்ஸோ, நாம் பார்க்கும் ஸூர்ய சந்த்ரர்களைவிட எவ்வளவோ மடங்கு அதிகமாகவும், தேவதைகள் தாநவர்கள் முதலியவர்களாலும் பார்க்கக்கூடாததாகவும் உள்ளது.

இப்படி ஒரு ஸ்தாநத்தைக் கல்பித்துக்கொண்டு விக்ரஹங்களுடன் கூடிய நித்யர் முக்தர் என்று சொல்லப்படும் ஜீவன்களுடன் ஸர்வேச்வரன் அங்கே எழுந்தருளியிருக்கிறான். அந்தத் திவ்யலோகத்தில் அநந்தங்களான ஜநபத நகர விமாந மண்டப கோபுராதி விபாகங்களும், "ஸஹஸ்ரஸ்தூணே விமிதே த்ருட உக்ரே யத்ர தேவாநாமதிதேவ ஆஸ்தே" என்கிறபடி அவைகளுள் ப்ரதாநதமமாகத் திருமாமணி மண்டபம் என்று ஒரு மண்டபமும் உண்டாம். அந்தத் திருமாமணி மண்டபத்தில் அநந்த தேவதாத்மகமான ஒரு திவ்யயோக பர்யங்க விசேஷமே இவனது திவ்யாஸநமாம். அங்கு இருக்கும் சேதநர்களுக்குப் பகவதபிமத விருத்தாசரணமே நேராது; ஜ்ஞாநஸங்கோசமென்பதே சிறிதும் ப்ரஸங்கியாது. அவர்கள் எல்லாரும், புராண புருஷனை

வைகுண்டநாதனை ஸதா தர்ஶநம் பண்ணிக்கொண்டு அவனை வானிளவரசனுகப் பெற்று வழுவிலா அடிமை செய்து வருவதையே வாழ்வாக உடைத்தானவர்கள். இதுதான், இதைப்பற்றிய நமது ஸித்தாந்தம்.

இதற்கு ப்ரமாணம் எது? என்று விசாரித்தால், மற்ற விஷயங்களிற் போலவே இதிலும் ஶ்ருதியே நமக்கு ப்ரமாணம் என்று ஏற்படும். "தமஸ: பரஸ்தாத்" "பரமே வ்யோமந்" "பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" இத்யாதியான அநேக வாக்யங்கள் இதை விஶதமாக்க் குறிக்கின்றன. ஸர்வேஶ்வரனுடைய விபூதிகள் அநந்தங்கள் என்றும், அவைகளில் ஒரு பாகம்தான் இந்தக் கார்யமான ஜகத் என்றும், மற்றும் ஒரு பெரும் பாகம் மேற்சொன்ன ஸ்தாந விஶேஷம் என்றும், இது கார்யமான ஜகத்துக்கு வெளிப்பட்டு நிற்கின்றது என்றும் இந்த வாக்யங்களின் அர்த்தம்; அதாவது - 'நாம் வஸிக்கும் லோகம் போன்ற லோகங்கள் அநேகம்; இவைகள் எல்லாம் ஒரு அண்ட கடாஹத்துக்கு உட்பட்டவை; இப்படி எவ்வளவோ அண்ட கடாஹங்கள் இருக்கின்றன; இவை யெல்லாவற்றையும் ஜலமயமான ஒருகோஶம் சுற்றிநிற்கின்றது; அதைச்சுற்றி அக்நி, அதைச்சுற்றி வாயு, அதைச்சுற்றி ஆகாஶம், அதைச்சுற்றி மஹத் என்கிற தத்வம், அதைச்சுற்றி அநந்தமான ப்ரதாநம் என்னும் தத்வம் இவ்வளவு ஆவரணங்கள் நிற்கின்றன; இதுவரையில் ப்ரக்ருதி மண்டலம்; இது ஒருபாகம்: இதற்கு வெளியில் நிற்பது எல்லாம் மற்றொருபாகம்' என்று ஏற்படுகிறது. "பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி - த்ரிபாதஸ்யாம்ருதம் திவி". விஶ்வா பூதாநி - ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டு நிற்கும் அசித் ஸம்ஸ்ருஷ்டரான சேதநரெல்லாம், பாத: - அம்ஶ மாத்திரம். திவி - ஸமஷ்டி வ்யஷ்டி தத்வத்திற்கு வெளிப்பட்டு நிற்கும அப்ராக்ருத ஸ்தாந விஶேஷத்தில், அஸ்ய அம்ருதம் த்ரிபாத் - பரமாத்மாவினுடைய விபூதி எவ்வளவோமடங்கு அதிகமானது. 'த்ரிபாத்' என்னுமிடத்தில் மூன்று என்று சொல்லியிருப்பது, அப்ராக்ருதமான போக்யம் போகஸ்தாநம் போகோ

பகரணம் இவைகளையாவது, ஜகத்திற்கு உட்பட்டிருக்கும் வஸ்துக்களுக்கு அபிமானிகளாகப் பூஷணம் முதலிய ரூபத்தைப் பெற்று நிற்கும் நித்யர், பகவதநுபவ மாத்ர பரரான நித்ய ஸித்தர், முன்பு ஸம்ஸாரிகளாக இருந்து பின்பு விடப்பட்டவரான முக்தர், ஆக இம்மூன்று விபாகங்களையாவது குறிக்கிறது என்று ஆசார்யர்களின் விவரணம்.

இந்த ப்ரக்ருதி மண்டலத்தைத் தமஸ் என்று வ்யவஹரிப்பதும் உண்டு. "ந தத்ர ஸூர்யோ பாதி" [அங்கே ஸூர்ய னுடைய தேஜஸ் மழுங்கிவிடும்] என்று சொல்லக்கூடிய அவ்வளவு தேஜோமயமான அந்த அப்ராக்ருத ஸ்தாநத்தைப் பார்த்தால், இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டிருக்கும் வஸ்துவெல்லாம் அந்தகார மக்நமாகவே தோன்றும். ஆகையால், இந்த அப்ராக்ருத ஸ்தாநத்தை "தமஸ: பரஸ்தாத்" [தமஸ்ஸுக்கு வெளிப்பட்டது] என்று சொல்லுகிறார்கள். ஶுத்த ஸத்வமான படியாலும் தமஸ்ஸுக்கு அதீதமென்றும் சொல்லலாம். இம்மாதிரியாகவே "ததக்ஷரே பரமே வ்யோமந்" என்றும், "யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்" என்றும், "ஹிரண்மயே பரே கோஶே விரஜம் ப்ரஹ்ம நிஷ்களம்" என்றும், "தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய:" என்றும், "தே ஹ நாகம் மஹிமாந: ஸசந்தே யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்றும், "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே" என்றும், "ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்றும், "நாகஸ்ய ப்ருஷ்டே ஸுக்ருதஸ்ய லோகே ப்ரஹ்மலோகா:" என்றும் பஹுமுகமாக ஶ்ருதி இந்த ஸ்தாநவிஶேஷத்தைப்பற்றிச் சொல்லுகிறது.

இதிஹாஸ புராணாதிகளிலும் இதற்கு அநுகுணமான வாக்யங்கள் காணப்படுகின்றன. மஹாபாரதத்தில் "த்ரீண்யேவ ஜ்யோதீம்ஷி விமாநாநி ஸஹஸ்ரஶ: - ஶுப்ரா திவ்யா ராஜந் வஹ்நிஜ்வாலோபமா: - ஸநாதநே வை நிரயாஸ்தா ஸ்தாந

ஸ்ய பாரோத்தமா:" [இஷ்டப்படி யெல்லாம் ஸஞ்சரிக்கக்கூடிய விமாநங்களென்ன, ஸபைகளென்ன, நிர்மலமான தீர்த்தத்தாலும் ஆஹ்லாத கரமான தாமரஸ புஷ்பங்களாலும் நிறைந்த வாபிகளென்ன இவைகளும், இன்னும் இந்த லோகத்தில் எவையெவைகளை நாம் போக்யங்களாக எண்ணுகிறோமோ, அப்படிப்பட்ட ரமணீயங்களான வஸ்துக்களும், இந்த ஸ்தாந விஶேஷத்தைப் பார்க்குமளவில் நரகதுல்யங்களாகின்றன] என்றும், "தத்ர கத்வா ந ஶோசந்தி ந வ்யதந்தி வ்யதந்தி ச" [அங்கே போனபிறகு துக்க ஸம்பந்தமேயில்லை, திரும்பி வருவது என்பதும் கிடையாது] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றுமொரு இடத்தில் தேவதைகள் பகவானைப்பார்த்துப் பின்வருமாறு ப்ரார்த்திக்கிறதைப் பார்க்கிறோம்: "திவ்யம் ஸ்தாநம் அஜரம் சாப்ரமேயம் துர்விஜ்ஞேயம் சாகமைர் கம்யமாத்யம் - கச்ச ப்ரபோ ரக்ஷ சார்த்தாந் ப்ரபந்நாந் கல்பே கல்பே ஜாயமாந: ஸ்வமூர்த்யா" [ஹே ப்ரபோ! மஹாயோகிகளாலும் அறியக்கூடாததாயும், வேதத்தால் மாத்திரம் வேத்யமாயும், நிரதிஶயாநந்தமயமாயுமுள்ள உம்முடைய அஜரமான திவ்யஸ்தாநத்திற்கு நீர் போம். ஒவ்வொரு கல்பத்திலும் உமக்கு அபிமதமாகவும் அநுரூபமாகவு மிருக்கும் மூர்த்தியில் ஆவிர்ப்பவித்து ப்ரபந்நரான எங்களை ரக்ஷிக்கவேணும்.] அரண்ய பர்வாவில் தர்ம புத்ரரைப் பார்த்து ஆர்ஷ்டிஷேணர் பின்வருமாறு சொல்லுகிறார்:— "ப்ரஹ்மண: ஸதநாதஸ்ய பரம் ஸ்தாநம் ப்ரகாஶதே - தேவா ஹி யந் ந பஶ்யந்தி திவ்யம் தேஜோமயம் ஶிவம் - க்ருத்யக்ருந்தமயம் தீர்த்தம் தஸ்ய ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: - தத்ர கத்வா புநர் நேமம் லோகமாயாந்தி பாரத" [சதுர்முக ப்ரஹ்மாவின் ஸ்தாநத்தைக் காட்டிலும் மேற்பட்டு நிற்கும் இந்தப் பரமமான ஸ்தாநம் மஹத்தான ஜ்யோதிஸ்ஸுடன் ஜ்வலிக்கிறது. தேவதைகளும் அதைப் பார்க்க முடியாது. ஸூர்யன் அக்நி இவர்களுடைய தேஜஸ்ஸை யெல்லாம் அதிக்ரமித்து நிற்கிறது, அதன் ப்ரகாஶம். அங்கே போய் மறுபடியும் இந்த லோகத்திற்குத் திரும்பிவருவது என்பதே இல்லை.]

ஸ்ரீவத்ஸ சிஹ்ந மிஶ்ரர் என்னும் கூரத்தாழ்வான், எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குணங்களைச் சொல்ல உபக்ரமித்து ஸ்ரீவைகுண்ட ஸ்தவம் என்னும் ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்தருளி யிருக்கிறார். அதில் பரமபதத்தைப் பற்றி வர்ணிக்குமிடத்தில், அதன் அநுஸந்தாநத்தால் தமக்கு உண்டான ஆநந்தம் பெருகி வழிந்ததுபோல நிற்கும் ஐந்து ஸ்லோகத்தைக் காணலாம்.

"𑌯𑌦𑍍𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌹𑌿 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌯𑌚𑍍𑌚𑍈𑌵 𑌪𑌰𑌮𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 - 𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌂 𑌪𑌰𑌮𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌯𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌯𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌕𑌨𑍍𑌦𑌮𑌤𑌿 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑍍𑌲𑌾𑌦𑌂 𑌯𑌤𑍍 ॥

𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍁𑌦𑍍𑌰𑌪𑍁𑌰𑍁𑌹𑍂𑌤𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌦𑍁𑌰𑌾𑌪𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑌤𑍈𑌃 𑌸𑌨𑌕𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌾 - 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑌾𑌶𑌿𑌷𑍀 𑌯𑌦𑌾 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌨 𑌪𑌦𑌮𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 ॥

𑌰𑍂𑌪𑍇𑌣 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌗𑌣𑍈𑌃 𑌪𑌰𑌯𑌾 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌹𑌾𑌵𑍇𑌰𑌾𑌜𑌾𑌰 𑌮𑌯𑌾𑌪𑍋𑌰𑌪𑌿 𑌵𑌾 𑌮𑌹𑌿𑌤𑍍𑌰𑌾 - 𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌤𑍀 𑌦𑍃𑌮𑌿𑌦𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌗𑌣𑌪𑍁𑌯𑌜𑍍𑌞𑍈 𑌪𑌾𑌪𑍋 𑌯𑌦𑍀𑌯 𑌵𑌿𑌭𑌵𑌸𑍍𑌯 𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑍈 ॥

𑌯𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌯 𑌪𑌕𑍍𑌷 𑌵𑌿𑌨𑌾𑌶𑌮𑌾𑌪𑍈𑌵 𑌵𑌿𑌪𑌕𑌾𑌪𑍈𑌰 𑌰𑍋𑌪𑍈𑌤 𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌤𑌮𑍍 𑌨𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌸𑍍𑌥𑌿 𑌶𑌬𑍍𑌦𑌂 - 𑌯𑌦𑍍𑌗𑍌𑌰𑌵𑌾 𑌹𑍍𑌰𑌾𑌤𑌿𑌷𑌾 𑌗𑌮𑍍𑌯𑌾 𑌗𑌮𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌮𑌨𑍍𑌯𑌦𑌪𑍋𑌤𑍍𑌥𑌰𑌮𑍍𑌯𑌾𑌵𑌂 𑌚 ॥

𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌮𑍈𑌷𑍈 𑌨𑌿𑌪𑍁𑌹𑌤 𑌜𑌨𑍍𑌮𑌜𑌰𑌾 𑌵𑌿𑌕𑌾𑌰𑍈𑌰𑍍 𑌹𑌰𑍍𑌷𑌪𑍁𑌯𑌿𑌷𑍍𑌠𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌹𑌪𑍈𑌵 𑌰𑌹𑌪𑍈𑌵 𑌰𑌪𑌾𑌪𑍍𑌯𑌂 - 𑌕𑍈𑌙𑍍𑌕𑌰𑍍𑌯𑌰𑌯𑌨𑍍𑌯𑌪𑌾𑌰𑌾𑌷𑍈 𑌮𑍁𑌨𑌸𑌾𑌪𑍍𑌯𑌨𑌾𑌪𑍍𑌯𑌂 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌨𑌾𑌮 𑌤𑌵 𑌯𑌾𑌮 𑌤𑌦𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 ॥"

பரம யோகிகளுடைய வாங்மநஸ்ஸுக்குக் கூட அபரிச்சேத்ய மான ஸ்வரூப ஸ்வபாவத்தை உடையதாம் அந்த ஸ்தாநம்; அது, இவ்வளவு ஆநந்தத்துடன் கூடினது, இவ்வளவு தேஜஸ்ஸுள் ளது, இப்படிப்பட்டது, அப்படிப்பட்டது, தாத்ருக், தாத்ருஶ என்று வர்ணிப்பது எல்லாம் அதன் அபரிச்சிந்ந ஸ்வரூபத்துக்கு அநுகுண மாகுமோ? ஶ்ருதி சொல்லியிருக்கிறபடி அது தமஸ்ஸு க்கு அதீதம் என்றும், அத்யத்புதமாகவும் அதிஸுந்தரமாகவும் அளவற்ற ஆநந்தத்துக்கு ஹேதுவாகவும் இருக்கிறது என்றும், த்ரைலோக்யாதிபத்யத்தை வஹிக்கும் ப்ரஹ்ம ருத்ரே ந்த்ரர்க ளென்ன ஸநகாதி மஹா யோகிக ளென்ன இவர்களாலும் எட்டக்கூடாதது என்றும், அதைவிட மஹநீயமான வேறு ஸ்தாநம் கிடையாது என்றும், அதன் வைபவத்தைப் பார்க்குமளவில் ஜ்யோதிஷ்டோமாதி கர்ம ஸாத்யமான ஸ்வர்க்காதி ஸுகங்க ளெல்லாம் மிகவும் துச்சமாகின்றன என்றும், கர்மயோக ஜ்ஞாந யோக பக்தியோக நிஷ்பந்நர்களே அதை அடையத்தகுந்தவர் கள் என்றுமன்றோ நாம் அறிய வேண்டும்? ஸர்வ விதத்திலும் ஸங் குசிதமான நம்முடைய ஜ்ஞாநத்தைக்கொண்டு அதைப் பரிச்சே திக்க முயல்வது மிகவும் பரிஹாஸாஸ்பதமே யாகும்.

இப்படி பஹுமுகமாகக் கூறப்பட்டிருக்கும் திவ்யமான ஸ்தாநத்தைப் பற்றி அநேக சோத்யங்கள் செய்யப்பட்டிருக்கின் றன. சிலர் 'ப்ரக்ருதியே அக்ஷரம் என்னும் பெயர் பூண்டு ஒரு பரிணாம விஶேஷத்தை அடைந்து ஈஸ்வரனுக்கும் நித்யருக்கும் முக்தருக்கும் போக ஸ்தாநம் ஆகின்றது' என்றும், இன்னும் சிலர் 'பகவானுடைய ஸ்வரூபமே விசித்ர ஶக்தி வஶத்தால் திவ்ய லோகமாக மாறி நிற்கின்றது' என்றும், மற்றும் சிலர் 'இந்தத் திவ்யஸ்தாநம், பகவானுடைய ஷாட்குண்யத்தின் பரிணாமம்' என் றும் சொல்லுகிறார்கள். இந்தப்பக்ஷங்கள் வாக்யங்களுக்கு விருத்த மாகிறபடியால் ஆசார்யர்கள் இவையொன்றையும் அங்கீகரியா மல், 'இது ஶுத்த ஸத்வ மென்னும் ஒரு த்ரவ்யத்தால் அமைந் தது' என்றே நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

இது ஸம்பந்தமாக இந்த ஸ்தாநத்தைப் பற்றி ஶ்ரீபாஷ்யகாரர் ஶ்ரீ வைகுண்டகத்யம் என்னும் மித கத்யத்தில் விஶேஷித்து அநேக அம்ஶங்களை விவரித்திருப்பதை நாம் கொஞ்சம் விசாரிக்கவேண்டும். அந்த ஸ்தாநத்தில் சிறந்த வ்ருக்ஷங்களடங்கிய திவ்யோத்யாநங்கள் அநேகமும், திவ்ய வாபிகளும், திவ்ய க்ரீடா ஶைலங்களும், திவ்ய லதா மண்டபங்களும் இருக்கின்றனவென்றும், குயிலின் கூவுதலும், வண்டுகளின் ஶப்தமும், ஹம்ஸங்களின் த்வநியும் அங்கே நிறைந்திருக்கின்றனவென்றும், இத்யாதியான போக்ய வஸ்து ஜாதத்தால் பூர்ணமானது அந்த ஸ்தாநமென்றும் அந்தக் கத்யத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்பொழுது, க்ஷுத்ர ஸுகத்துக்கு ஆதிக்யம் ஏற்படுத்தப்பட்டதுபோலத் தோன்றும். இவையெல்லாம் அப்ராக்ருதம் என்பதை நாம் மறக்கக்கூடாது. தவிரவும், இந்தக் கத்யம் உபதேஶ முகத்தால் ஶிஷ்ய ஶிக்ஷணார்த்தம் ப்ரவ்ருத்தித்தது என்பதை மநஸ்ஸில் வைத்துக்கொள்ள வேண்டும். அதிற் சொல்லியிருக்கும் அநுஸந்தாந ப்ரகாரம் அவிச்சிந்ந ப்ரவாஹ ரூபமாகப் பகவானையே பார்த்திருப்பதாக நாம் த்யாநித்தால், ஶ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறபடி அம்ருத ஸமுத்ரத்தில் அமிழ்ந்து நிற்கும் ஸர்வ அவயவங்களுடன் கூடினவராகப் பரம ஸுகத்தை அநுபவிக்கலாம் என்பதற்கு ஐயமே இல்லை. அநாதி காலமாக ஸம்ஸாரத்தில் உழன்று வரும் நமக்கு எவை எவை போக்யமாகத் தோன்றுமோ அவையெல்லாம் அப்ராக்ருத ஸ்வரூபத்துடன் அவ்விடத்தில் நிறைந்திருப்பதாக அருளிச்செய்திருப்பதே, விஷய ஸுகத்தையே பெரிதாக நினைத்திருக்கும் சேதநருக்குக்கூட அத்யந்தம் ஆவர்ஜகமாகிறது. ஸ்வாமி இந்தக் கத்ய ஆரம்பத்தில் ப்ரதிஜ்ஞை செய்திருப்பதும், 'மஹத்தான ப்ரீதி புரஸ்ஸரமாகவும் ஆவலுடனும் நாம் அநுஸந்தாநஞ் செய்வதற்காக இது ஏற்படுத்தப்பட்டது' என்பதை விளக்குகின்றது. "யாமுநார்ய ஸுதாம்போதிமவகாஹ்ய யதாமதி - ஆதாய பக்தியோகாக்யம் ரத்நம் ஸந்தர்ஶயாம்யஹம்" [யாமுநாசார்யரின் திவ்யஸூக்திகளாகிற அம்ருத ஸாகரத்தில் மூழ்கி அதனடியிற்கிடக்கும் பக்தி

யோகம் என்னும் ரத்நத்தை எடுத்து வெளிப்படுத்துகிறேன்] என்று முதலில் படித்திருக்கிறது. இங்கு 'பக்தியோகம்' என்னும் ஶப்தம் ஸ்வயம் ப்ரயோஜநமாகச் செய்யும் பகவதநுஸந்தாநத்தைக் குறிக்கும் என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளம்; இது, உபாய பூர்த்தி செய்தவரின் அநுஸந்தாந க்ரமமே தவிர மற்றொரு பலத்திற்கு ஸாதநமாக விவக்ஷிக்கப்படவில்லையாதலாலும், இந்த மாதிரியான சோத்யங்களுக்கு அவகாஶமில்லை.

இந்த லோகத்திலிருக்கும் க்ஷுத்ர ஸுகங்களைப் பெரிதாக எண்ணி அவைகளில் உழன்று கொண்டிருக்கும் நாம், சில ஸமயங்களில் பரமாநந்த ஹேதுவாக இருக்கும் பரலோக வைபவத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, நம்முடைய சிறிய புத்தியைக்கொண்டு அதன் ஸ்வரூபத்தை அறிய முயல்வதையும், ஹார்த்தமாக நமக்கு அது விஷயமாகத் தாஹம் நேர்வதையும், மிஸ்ஸிஸ் ஹெமன்ஸு என்னும் ஒரு ஆங்க்லபௌம மஹாகவி, தாயாருக்கும் அவளுடைய ப்ரஜையாகிற ஒரு சிறிய குழந்தைக்கும் நடக்கும் ஸம்வாத ரூபமாக விவரித்திருக்கிறாள்.

"அம்மா! ஏதோ ஒரு உத்தமஸ்தாநம் ஓரிடத்தி லிருப்பதாகவும், அதிலிருக்கும் என் போன்றவர்களெல்லாம் அழுகையே இல்லாமல் ஸதா ஸந்துஷ்டர்களாக இருக்கிறதாகவும் நீர் அடிக்கடி சொல்லுகிறீரே! அதை நாம் தேடிப்போகக் கூடாதா? அது எங்கே இருக்கிறது? நல்ல புஷ்பங்கள் மலருமிடத்தி லிருக்கிறதோ? அது பெரிய வ்ருக்ஷங்கள் வளரும் இடமோ? நல்ல பலங்கள் கிடைக்கும் இடமோ? ஸமுத்ர மத்யத்தில் நறுமணத்துடன் வீசுங் காற்றும் விசித்ர வர்ணங்களையுடைய சிறகுடன் பறக்கும் பக்ஷியும் நிறைந்திருக்கும் த்வீபங்கள் தானோ அந்த ஸ்தாநம்? இல்லாவிட்டால், பஹு தூரத்தில் ஸ்வர்ண மணல்களையுடைய நதிகளும், காந்தியைக் கக்கும் ரத்நங்களும், பவழக்கொடிகளிருக்கும் கரையில் ப்ரகாஶிக்கும் முத்துக்களும் நிரம்பியிருக்கும் ஒரு ஸ்தாநத்தில் இருக்கிறதோ? அம்மா! அதை எனக்குச் சொல்லவேணும்" என்று கேட்ட தன் குழந்தையைப் பார்த்துப் பின்வருமாறு மாதா உத்தரமளிக்கிறாள்:

“Eye hath not seen it, my gentle boy!
Ear hath not heard its deep songs of joy;
Dreams cannot picture a world so fair;
Sorrow and death may not enter there;
Time doth not breathe on its fadeless bloom,
Far beyond the clouds and beyond the tomb,—
It is there, it is there, my child!”

“என் கண்மணியே! அந்த ஸ்தாநத்தை இந்தக் கண் பார்த்த தில்லை; அங்கிருக்கும் கம்பீரமான காநத்தை இந்தக்காது கேட்ட தில்லை; அதி ஸுந்தரமான அந்த ஸ்தாநத்தை ஸ்வப்நத்திலும் நாம் பார்க்கமுடியாது; ஜரா மரணாதி துக்கம் என்பதே அங்கு ப்ரவேஶிக்காது: ஸார்வகாலிகமான விகாஸத்துடன் கூடிய அந்த இடத்தில் காலத்தின் ப்ராபவம் செல்லுகிறதில்லை. மேகங்களுக்கு அப்புறத்தில், ஆகாஶத்திற்குமேல், அந்த லோகத்தில் இருக்கிறது அந்த இடம்.”

நமது புத்தியைக்கொண்டு அந்தத் திவ்யஸ்தாநத்தின் வைபவத்தை அறிய முயலும் நாம் எவ்விதத்தில் இந்த ஶிஶுவை விடச் சிறந்தவர்? “ந ஸம்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் - ஹ்ருதா மநீஷா மநஸாபிக்லுப்தோ ய ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி” என்றன்றோ ஶ்ருதி கதறுகின்றது?

பத்ராதிபர்.

ஶ்ரீ:

# ஶ்ரீ பாகவத தனிஶ்லோகீ.

௨௫. 𑌇𑌤𑌿 𑌗𑍋𑌪𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍𑌤𑍍𑌯𑌶𑍍𑌚𑌚𑌿𑌤𑍍𑌰
𑌧𑌾- 𑌰𑍁𑌰𑍁𑌦𑍁𑌃 𑌸𑍁𑌸𑍍𑌵𑌰𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌾𑌲𑌸𑌾𑌃 ॥

ஶுக மஹர்ஷி, கோபிகைகள் ஶ்ரீ க்ருஷ்ணனைப் பிரிந்து நோவுபட்டபடியைத் தனித்தனியே பேசி, பகவத் விஷயத்தில் இப்படிப்பட்ட தசை உண்டாவது துர்லப மாகையாலும், இது தமக்கு ஆகர்ஷகமாக இருந்தபடியாலும், சேர்த்து அநுஸந்தித்து அவர்களைக் கொண்டாடுகிருர். இப்படியே ஶ்ரீ வால்மீகி பகவானும், பிராட்டி அஶோக வநிகையில் பெருமாளைப் பிரிந்து படும் பாட்டைப் பரக்கப் பேசி, "𑌦𑌯𑌾𑌮𑌤𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌾𑌂" என்று துக்கத்தின் மிகுதியைச் சொல்லி, "𑌅𑌨𑌿𑌂𑌦𑌿𑌤𑌾𑌂" என்று பிறகு அவளைக் கொண்டாடினுனிறே!

இதி - "𑌗𑌿𑌰𑌾 𑌗𑌿𑌰𑌾𑌶𑌾𑌵𑌾𑌃" "பாலினல்ல மென் மொழியாள், பண்ணினன்ன மென் மொழியாள்" என்று சொல்லுகிறபடியே ஸாதாரணமான உக்தி மாத்ரத்திலும் இனிமை விஞ்சியிருக்கும்; அதிலும் விஷயமும் ஶ்ரீ க்ருஷ்ணன்; இவர்களும் யௌவநபருவ முள்ளவர்கள்; "தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து ஆர்வத்தால் அவர் புலம்பிய புலம்பல்" என்கிறபடி அவன்திறத்தில் அபிநிவேஶாதிஶயத்தாலே பிறந்த சொல்லாகையாலே போக்யதை அளவு பட்டிருக்குமோ? ஆகையால், அது மஹர்ஷியையுங்கூட மேல்நோக்கிப் போகாமல் பிற்காலிக்கும்படி செய்கிறபடியால், அதையே மறுபடி அநுவதிக்கிருன் 'இதி' என்று. பரம யோகிகளுக்கும் வாங்மநஸா பரிச்சேத்ய ஸ்வ

ரூபஸ்வபாவமான பகவானுடைய பரத்வமும், உபாஸகனுக்கும் ஜந்மாந்தரங்களால் விளம்பமில்லாமல் பலத்தைக் கொடுக்கவற்ருய் ‘‘ஜந்ம கர்ம ச மே திவ்யம்’’ என்று அவன்தானே கொண்டாடும் படியான அவதார ரஹஸ்யமும், அதற்கு ஸௌலப்யமும் இவர் களுக்கு அநாயாஸேந ‘‘கலிமெஹிநாமஹொராத்ரக்’’, ‘‘வஸுஜாவித்ருதம்’’, ‘‘விஸ்வருபயே ஸவ உஷெயிவாநு ஸாக்ஷாத்தாம் கர்மெ’’ என்று பேசும்படி யிருந்ததே! என்று அர்த்தகௌரவத்தாலே இதைத் திரும்பவும் அநுவதிக்கிருளுகவுமாம்.

‘இப்படி அநுஸந்தித்தவர்கள்தான் யார்? பராஶராதி மஹர்ஷிகளில் ஒருவரோ? ‘‘உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ண னெம்பெருமான்’’ என்று இருக்கும் ஆழ்வார்களில் ஒருவரோ?’ என்ருல், ‘அவர்களில் ஒருவரும் அல்லர்; ‘‘மொவ்யஃ’’ அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்தில் பிறந்த பெண்பிள்ளைகள்’ என்கிருர். ‘‘இரந்துரைப்ப துண்டு வாழி ஏம நீர் நிறத்தமா, வரந்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில் மன்னு சீர், பரந்த சிந்தை யொன்றி நின்று நின்ன பாத பங்கயம், நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே!’’, ‘‘ஹவதர வரஸு லெரக்ஷீ ஹக்திரஸ்துவா’’, ‘‘ஸாநந்தயொஜித வர ஹக்தியதம் ரோம் கரரஷ’’ என்று ப்ரார்த்திக்கப்பட்டதாயும், ‘‘யெஜந கொடிவிரவாஜிதஸஹ யரோ ஹேஷாம் ஹவது ரணஹக்திரநஹொஹா’’, ‘‘ஜநாஹா ஸஹஸ்ரஷ தவொ யாந ஸரோயிஷிஃ - நராணாம் க்ஷீணவாவாநாம் க்ருஷெ ஹக்திஃ வ்ரஜாயதெ’’ என்று கொண்டாடப்பட்டதாயும் இருக்கிற பக்த்யதிஶயம் இவர்களுக்குத் தன்னடையே இருக்கின்றதன்ரே? யாருக்கு வரக்கூடிய தஶை யாருக்கு உண்டாயிற்று? என்று மஹர்ஷி விஸ்மயப்படுகிருன். கோபிகளும், இந்தப் பக்த்யதிஶயம் தங்களுக்கு இருப்பதை, ‘‘தூடி யமாயதெ கவார வஶ்யதாம்’’, ‘‘வதிஸதாநுய ஹாதரவாஙவாநதிவிஷம்

வ்யதெ5 வ்யாதாமதாஃ'' என்று இப்படி பஹுமுகங்களாய்ப் பேசி யிருக்கிறார்களன்றோ? "வஸிதவ்யா ஸயா ஸங்கா ஸிதாணி வ யநாநிவ - ஹவஹ்தம் ஸெளராஜ்யம் வ ஜீவிதம் வ ஸுவாநி வ'' என்று மஹா ப்ராஜ்ஞனன ஸ்ரீ விபீஷணாழ்வான் வார்த்தையை அநுஸரித்திருக்கிறதன்றோ அஜ்ஞர்களிற் கடையரான இவர்களின் வார்த்தை?

"ஹூமாயஷூஃ'' - விஸேஷமாகப் பாடிக்கொண்டும். "உஹூக்தா யத்ர மாயஷி தத்ர திஷ்டாமி நாரத'' என்கிற ப்ரமாண கதியை அநுஸந்தித்துப் பாடத்தொடங்கினார்களென்றாகவுமாம். தங்களுக்கு ப்ரணய கோபம் தலையெடுத்து நிற்கும்; அப்பொழுது அதைத் தணிப்பதற்காக அவனும் "மருளைக் கொடு பாடி வந்தில்லம் புகுந்தீர், காமனெனப் பாடி வந்தில்லம் புகுந்தீர்'' என்று சொல்லுகிறபடியே, கானத்தைச் செய்துகொண்டே தங்களில்லத்திற் புகுருமே; தாங்களும் அந்தக் கானத்தைக் கேட்டவாறே "தூவலம்புரியுடைய திருமால் தூயவாயிற் குழலோசை வழியே, எங்குங் காவலும் கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே'' என்று சொல்லுகிறபடியே தங்கள் ப்ரணயரோஷங்களைக் குடியோட விட்டு அவன் கருத்துக்கு இசைந்தல்லவோ நிற்கிறார்கள்? இதைத் தாங்களே "நைவள மொன்றாராயா நம்மை நோக்கா நாணினார்போ லிறையே நயங்கள் பின்னும், செய்வளவி லென் மனமும் கண்ணு மோடி எம்பெருமான் திருவடிக்கீழணைய இப்பால், கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்'' என்று சொல்லி யிருக்கிறார்களே! ஆகையால், தனது ஶரணாகதி பலிக்கக் கண்ட ஸ்ரீ விபீஷணாழ்வான் "ஸர்வலோக ஶரண்யாய ராகவாய மஹாத்மநே'' என்று பெருமாளையும் செய்யும்படி விதித்தாப்போலே, தங்கள் திறத்தில் அவனுக்குப் பலிக்கக்கண்ட இந்தக் கானத்தை அவன் திறத்தில் தாங்களும் அநுஷ்டித்தார்கள் என்றாகவுமாம். "பாடும் குயில்காள் ஈதென்ன பாடல் நல்வேங்கட, நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின், ஆடும் கருளக் கொடியுடை

யார் வந்தருள்செய்து, கூடுவாராயிடின் கூவுநும் பாட்டுக்கள் கேட்டுமே" என்று அஸஹ்யமான தசையில் அயலார் பாடக் கேட்பது தவிரத் தான் பாட ஸம்பாவநை இல்லையாகையால், இவர்கள் பக்தி பரீவாஹமாய்ச் சொன்ன சொற்களைப் பாட்டுப்போலே இனிமையா யிருப்பதாகப் பாவிக்கிறு ரென்றுகவுமாம். இவர்கள் தாம் பண்ணேவென்ற இன்சொல் மங்கையர்களான படியால், ஏதேனும் ஒரு வார்த்தை சொன்னலும், அது ஸர்வ லக்ஷண ஸம்பந்நமான காநத்திலும் இனியதாயிருக்கும்; அவர்களே பகவத் குணங்களைச் சொன்னல் இனிதாயிருக்கச் சொல்லவேண்டுமோ? என்று கருத்து. வ்ருக்ஷேஷு கா³யந்த்ய: - வ்ருக்ஷகா³யந்த்ய: அதாவது - "மரங்களு மிரங்கும் வகை மணிவண்ணவோ வென்று கூவுமால்" என்கிறபடியே இவர்கள் காநத்தில் சேதநா சேதநமான ஸர்வ வஸ்துக்களும் ஸ்ரீ ராம விரஹத்தில் பட்ட பாடெல்லாம் பட்டன என்கிறது. அன்றிக்கே, வ்ருக்ஷம் யதா²ததா² கா³யந்த்ய: ; அதாவது - அவனுடைய குணம் முதலியவைகள் நிறம் பெறும்படியாகப் பாடினர்களென்றுகவுமாம். எம்பெருமான் திருவுள்ளத்திற்கு மேன்மேல் அதிகமாக உகப்புண்டாகும்படி பாடினர்களென்றுகவுமாம். "கோ³விந்தே³தி யதா³க்ரந்த³த் க்ருஷ்ணா மாம் தூ³ரவாஸிநம்- ருணம் ப்ரவ்ருத்³த⁴மிவ மே ஹ்ருத³யாந்நாபஸர்பதி" என்று 'கோவிந்த' என்கிற உக்தி மாத்ரத்தை உண்டு அறுக்க மாட்டாத ஶரண்யன் க்ருபைக்கு இப்படி இவர்கள் பாடினது மிகை என்பது சொல்லவும் வேண்டுமோ? என்று கருத்து.

ப்ருவத்ஸ்வ விச்ர்யா - விசித்ரமாகப் பிதற்றிக் கொண்டும். அதாவது - ஒருபொழுது "க்ருஷ்ணோऽஹம் பஶ்யத க³திம்", "இன வாயர் தலைவன் யானே யென்னும்" என்றும், மற்றொரு ஸமயத்தில் "கிம் தே க்ருதம் க்ஷிதி தப:", "மண்ணையிருந்து துழாவி வாமநன் மண்ணிது" என்றும் அவனுடைய ஸம்பந்தமுள்ள பதார்த்தங்களைக் கண்டு துக்கம் தலையெடுத்துக் கதறியும், சேதநா சேதந விபாகமறக் கண்டதடைய "மாலாய்ப் பிறந்த

நம்பியை மாலே செய்யும் மணாளனை, ஏலாப் பொய்களுரைப் பானை யிங்கே போதக் கண்டீரே" என்று வினவியும் ஒரு நியதி இல்லாமல் பிதற்றினார்கள் என்கிறது. அன்றிக்கே, லோகத்தில் விரஹிகள் படியில்லாமையாலே வியக்கத்தக்கதாய் என்றாகவுமாம். "பின்னை கொல் நிலமா மகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள், என்ன மாயங்கொலோ இவள் நெடுமாலென்றே நின்று கூவுமால்," "முன்னம் நோற்ற விதிகொலோ முகில்வண்ணன் மாயங்கொலோ," "நங்கைமீர் நீரு மோர்பெண் பெற்று நல்கினீர், எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற வேழையை, செய்கின்ற தொன்றறியேனே" என்கிறபடியே தாய்மாராலும் உயிர்த்தோழிகளாலும் இன்னதென்று கண்டறியக் கூடாதபடி அதி விசித்ரமாய் ப்ரலாபங்களைச் செய்கிறார்க ளென்றாகவுமாம். அஜ்ஞர்களைப்போல "த்ருஷ்டோ வ: கச்சிதஶ்வத்த வ்ருக்ஷ" என்று அறிவில்லாத வஸ்துக்களைக் கேட்டும், வேதாந்த ஜ்ஞாநிகளைப் போல "ஸர்வமேதத்தி நாராயணாத்ருக்" என்று சொல்லியும், "ஸோஹம் ஆத்மாஹவம் ஸர்வஸ்ய" என்று அநுஸந்திக்கும் உபாஸகரைப் போல "க்ருஷ்ணோஹம்" என்று பேசியும், காமுகைகளைப் போல "க்ருஷ்ணி ஹ்ருத்யம், ஸ்வயம்வஸீயந்நாஸ்வப்யாயஸ்வந:" என்று சொல்லியும், அநேக விதமாகப் பிதற்றுகிறார்கள் என்கிறதாகவுமாம்.

தாந்தாநா: ஸந்தாபம் - இப்படிப் பல ஸாதநமென்று நிஸ்சயிக்கப்பட்ட உபாயமும் விபலமாய்ப் போன பிறகு அநவாப்தி தலையெடுத்து அழத் தொடங்கினார்கள். அவ்விடத்திலும் அவர்கள் பேச்சில் ஸ்வதஸ் ஸித்தமான மாதுர்யம் மாறவில்லை என்கிறார். அன்றிக்கே, அவனுக்குப் பரமபதத்தில் இருப்பும் அஸஹ்யமாம்படி முக்த கண்டராய் அழுதார்கள் என்கிறதாகவுமாம்.

ராஜந் - ஹே ராஜாவே! இப்படி அவர்களுடைய ப்ரேமாதிஶயத்தில் ஈடுபட்டு மேல் ஒன்றும் தோன்றாமல் தான் தியங்கும்படியை "அந்தே வக்ஷ்யாமி" என்று ஸ்ரீ நாரத பகவாந்

ஸ்ரீ:

# பீஷ்மர்.

“ந யஸ்ய [illegible] விவேக்தும் ஶக்நோதி தே
ப்ரஶ்நம் யதாவத் - [illegible]
[illegible] ॥

[illegible] யுதிஷ்டிரே [illegible]
[illegible] ॥

[illegible] யுதிஷ்டிர [illegible]
தே ப்ரஶ்நம் ப்ருவீதி ॥”

நம்முடைய இதிஹாஸ புராணாதிகளில் தர்மாதர்ம விவேகமுள்ளவராகவும், அநுஷ்டாநத்திலும் தர்மத்தை விட்டு வழுவாதராகவும் சொல்லப்பட்டிருக்கும் மஹாங்களுக்குள் மிகச் சிறந்தவர் பீஷ்மர். குருக்ஷேத்ர யுத்தம் ஆன பிறகு ராஜ்யம் முழுமையும் கைக்குக் கிடைத்தும் ப்ரஜா த்ரோஹத்திலிருந்து பபந்தவராகத் தர்மமூடராய் மஹத்தான க்லேஶத்தை அநுபவித்துக்கொண்டிருந்த யுதிஷ்டிரருக்குத் தர்மோபதேஶம் செய்தவர் இந்தப் பீஷ்மரே. “[illegible] ॥” என்று ஒரு தர்மமும்

மிச்சம் இல்லாமல் ஸகல விதமான வைதிக தர்மங்களையும் ஸ்மார்த்த தர்மங்களையும் மஹர்ஷி ஸங்கத்தின் நடுவில் தாம் ஶரபஞ்ஜரத்தில் படுத்து உத்தராயண ப்ரதீக்ஷராக முமூர்ஷுவாக இருக்கையிலும் தமது நோவைப் பாராட்டாமல் தர்மத்தை நிலைநிறுத்தவேணுமென்கிற ஹார்த்தமான எண்ணத்துடன் தர்மோபதேசஞ் செய்தவர் இவரன்றோ? 'இவ்வளவு தர்மஜ்ஞானமும் பாபபயமும் அவரிடத்தில் நிறைந்திருந்தும் துஷ்ட சாரித்ரனான துர்யோதனனுக்கு வசப்பட்டு, துஶ்ஶாஸந ப்ரப்ருதிகளைக்கொண்டு அந்தத் துர்யோதனன் த்ரௌபதீவிஷயமாகப் பெருத்த அக்ரமங்களைச் செய்வித்தபொழுது பராங்முகராக இருந்துவிட்டாரே! இதுதான் தர்மம் அறிந்தவரின் லக்ஷணமோ?' என்கிற அதிஶங்கை பாரத கதையைப் படிக்கும் ஜநங்களின் மநஸ்ஸில் உண்டாகும். அதைப்பற்றி இப்பொழுது கொஞ்சம் விசாரிப்போம்.

சூதாட்டம் ஆடி ஸர்வஸ்வத்தையும் இழந்து விதி வஶத்தால் தர்மபுத்ரன் துர்யோதநனுக்கு அடிமை பூண்டவுடன், மந்தபுத்தியான துர்யோதநன், மிகவும் ஸந்துஷ்டனாய், தனது பின்பிறந்தவனான துஶ்ஶாஸநனைக்கொண்டு தனது அடிமையாகிற தர்மராஜனின் பார்யையாகவும் பதிவ்ரதோத்தமையாகவுமுள்ள த்ரௌபதியை ரஜஸ்வலையாக இருக்கையிலும் பலாத்காரமாக ஸபைக்கு வருவித்துப் பேசத்தகாத பேச்செல்லாம் பேசினான். தூர்த்தனான துஶ்ஶாஸநனும் 'அயி த்ரௌபதி! நீ ரஜஸ்வலையாக இருந்தாலென்ன? ஒரு வஸ்த்ர முள்ளவளாக இருந்தாலென்ன? வஸ்த்ரமே இல்லாவிட்டாலென்ன? சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டுவிட்டபடியால் எங்களுடைய அடிமை நீ; ஆகையால் ஸர்வதோமுகமான ப்ரபுத்வம் உன்னிடத்தில் எங்களுக்கு உண்டு' என்று சொல்லி ஸபை நடுவில் பலவாறாக அவளை அவமாநம் செய்கையில், அவள் லஜ்ஜை தாங்கமாட்டாமல் க்ருஷ்ணனையும் ஜிஷ்ணுவையும் கூவிக் கதறியழுது, பிறகு க்ஷத்ரியஸ்த்ரீ யானபடியால் தமது ஜாதிக்கு இயற்கையாக இருக்கும் தைர்யத்தை அவலம்பித்துப் பின்வருமாறு ஸபையிலிருந்தவர்களைப் பார்த்து ப்ரஶ்நஞ் செய்தாள். "இந்த ஸபையிலிருக்கும் எல்லாரும் எனது குருவாகவும் குருதுல்யராகவும் இருக்கிறார்களே! அவர்கள் முன்னிலையில் இப்படி நான் நிற்பது ந்யாயமோ? ஶாஸ்த்ரம் படித்து அநுஷ்டாந பூர்த்தியுள்ள கௌரவ ஶ்ரேஷ்டர்கள் எனக்கு ந்யாயத்

தைச் சொல்லவேணும். அநார்யர்களாகவும் பிறரை மோசஞ்செய்வதையே தொழிலாக வுடையவர்களாகவுமுள்ள இந்தத் துஷ்டாத்மாக்களால் என்னுடைய பதி தமது இஷ்டத்துக்கு விருத்தமாக இழுக்கப்பட்டுப் பலபெயரால் ஒன்று சேர்ந்து ஜயிக்கப்பட்டால் அது ஜயமாகுமோ? மனைவியைப் பந்தயம்வைத்துச் சொக்கட்டாடுவது முண்டோ? அப்படி யாடினாலும் தாம் அடிமைபூண்ட பிறகு என்னைப் பந்தயம் வைத்து ஆடுவதும் செல்லுமோ? இந்த ஸபையில் நிறைந்திருக்கும் பெரியோர்கள் இவை யெல்லாவற்றையும் ஆலோசித்து எனக்கு ந்யாயங் கொடுக்கவேணும். தர்மத்தை மீறி அக்ரமத்தைச் செய்யும் இந்தத் துஷ்டர்களைப் பார்த்து நிற்கும் பீஷ்மர் த்ரோணாசார்யர் விதுரர் இவர்கள் எல்லாருக்கும் ஸத்வம் இல்லாமற் போய்விட்டதோ? ஹா தைவமே! என் செய்வேன்?” என்று அழுதாள்.

இதைக் கேட்ட ஸப்யர்கள் மிகவும் மனங்கலங்கி ஜ்ஞாநத்தாலும் வயஸ்ஸாலும் வ்ருத்தரான பீஷ்மர் முகத்தைப் பார்க்க, பீஷ்மர் த்ரௌபதியைப் பார்த்து அவள் கேட்ட ப்ரஸ்நத்திற்குத் தம்மால் யதாவத்தாக மறுமொழி கூறக் கூடவில்லையென்றும், ஸர்வைஸ்வர்யமுங்கூடின ராஜ்யம் முழுவதையுங் கைதவறவிட்டாலும் தர்மத்தை ஒருபொழுதும் விடாமலிருக்கும் ஸ்வபாவமுள்ள தர்மபுத்ரரே ‘ஜயிக்கப்பட்டுப் போய்விட்டேன்’ என்று ஒப்புக்கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது தமக்கு ஒரு விதமான நிர்ணயமும் தோன்றவில்லையென்றும் “த்யூதே ந ஸமர்தோ விவேக்தும் தே”, “த்யூதே ந ப்ரஸ்நம் வ்யாஹர்தி” என்கிற வாக்யத்துடன் கூடிய மூன்று ஸ்லோகங்களைச் சொன்னார். இந்த மூன்று ஸ்லோகங்களும் ஆரம்பத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

தவிரவும், துர்யோதந ப்ரப்ருதிகள், பீஷ்மர் ஸந்திக்தமாக இப்படிப் பதில் சொன்னதைக் கேட்டுத் தங்களுடைய தௌராத்ம்யத்தைப் பதின்மடங்கு அதிகமாக வெளியிட்டு, எவ்விதமான குற்றத்தையும் அறியாத த்ரௌபதியை ஸதஸ்ஸில் இன்னும் பரிபவப்படுத்தும் பொருட்டு அவளுடைய வஸ்த்ரத்தை அபஹரிக்க யத்நித்து, அந்த யத்நத்தில் பகவத் ஸங்கல்பத்தால் பக்நோத்ஸாஹர்களாகவும் அங்கு வந்திருந்த

ஸர்வ ஜநங்களாலும் திக்கரிக்கப்பட்டவர்களாகவும் அவர்கள் நின்ற பொழுது, மறுபடியும் த்ரௌபதி ஸதஸ்யர்களைப்பார்த்து, "க்ஷத்ரிய தர்மத்தில் பதிவ்ரதையாக இருக்கும் ஸ்த்ரீயை ஸபைக்குக் கொண்டு வருவது பெரிய அதர்மமென்று படிக்கப்பட்டிருக்கிறதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேனே! அந்தத் தர்மம் கௌரவர்கள் விஷயத்தில் லுப்தமாகி விட்டதோ? ஹே ஸதஸ்யர்களே! நான் ந்யாயப்படி அடிமை ஆகிவிட்டேனா? இல்லையா? என்பதை நீங்கள் விதிக்கவேணும். உங்களுடைய நிர்ணயப்படி நான் நடக்கிறேன். ஸ்பஷ்டமாகச்சொல்ல க்ருபை செய்யவேணும் [𑌬𑍍𑌰𑍂𑌤 𑌦𑌾𑌸𑍀𑌮𑌦𑌾𑌸𑍀𑌂 𑌵𑌾 𑌤𑌤𑍍𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌕𑍌𑌰𑌵𑌾𑌃]" என்று அதி தைந்யத்துடன் கேட்டாள். அப்பொழுதும் முன் சொன்னது போலவே பீஷ்மர், "𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌿 𑌯𑌥𑌾𑌹𑌸𑍍𑌯 𑌵𑌾𑌰𑍋 𑌮𑌤𑌿𑌃 । 𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑍍𑌤𑍁𑌂 𑌚 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑌿𑌮𑌂 𑌶𑌕𑍍𑌨𑍋𑌮𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌤𑍍" என்று தமக்கு ஒன்றும் தோன்றவில்லையென்று சொல்லிவிட்டு, "𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌿𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 । 𑌅𑌜𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾 𑌜𑌿𑌤𑌾𑌂 𑌵𑍇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿" [அவளுடைய ப்ரச்நத்திற்கு ஸமாதாநத்தைத் தர்மபுத்ரரே சொல்ல அர்ஹர்] என்று சொல்லிவிட்டு விரதரானார்.

இதுவா தர்மஜ்ஞர்களின் மார்க்கம்? பெருங்காற்றில் அகப்பட்ட கதளீ வ்ருக்ஷம்போலத் துராத்மாக்களின் கையில் அகப்பட்டு அநாதையாக ஸப்யர்களைப் பார்த்து ந்யாயாபந்யாய விவேகத்திற்காகக் கதறுகிற ஒரு ராஜஸ்த்ரீக்கு இப்படிச் சொல்வதும் ஒரு ஸமாதாநமாகுமோ? ஸர்வமும் தெரிந்த பீஷ்மருக்கு இது தகுந்ததோ? வ்யபதிஷ்டரான இவர் இதைப்பிசகு என்று முதலில் கண்டித்தால் துர்யோதநன் மேன்மேல் அக்ரமங்களில் ப்ரவ்ருத்திப்பனா? ஸாமாந்ய ஜநங்கள் விஷயத்தில் இந்த மாதிரியான ஸமயங்களில் தர்மம் சொல்லாமலிருப்பது ஓர் சிறிய குற்றமானாலும், வ்யபதிஷ்டரான இவர் விஷயத்தில் இது ஓர் பெரிய பிசகு என்றே தோன்றுகிறது.

துர்யோதநனுடைய தம்பியர்களில் விகர்ணன் என்று நற்குணமுடையான் ஒருவன் உண்டு; அவனுக்கு இந்தக் குரு வ்ருத்தர்களின் நடவடிக்கை கொஞ்சமேனும் ருசிக்கவில்லை. அப்பொ

ழுது த்ரௌபதியின் கஷ்டதசையையும் தன்னுடைய ப்ராதாக்களின் உபர்யுபரி வ்ருத்தியாகும் தௌராத்ம்யத்தையும் பார்த்து ஸஹியாமல், “[illegible] ] பீஷ்மர் முதலிய குருவ்ருத்தர்கள் வார்த்தகத்தால் மோஹத்தை அடைந்திருந்தாலும் கௌரவர்களெல்லார்க்கும் ஆசார்யர்களாக இருக்கும் த்ரோணர் க்ருபர் இவர்கள் கூட இப்பொழுது த்ரௌபதியின் ப்ரச்னத்திற்குத் தக்க பதில்சொல்லாமல் இருக்கக்கூடுமோ?” என்று பலதடவை ப்ரோத்ஸாஹநஞ் செய்தும், ஒருவரும் அசையாம லிருப்பதைக் கண்டு கோபங்கொண்டு சீறி வரும் ஸர்ப்பம்போலப் பின்வருமாறு பேசத் தொடங்கினன். “[illegible]” - ‘ஸப்யர்காள்! நீங்கள் பதில் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், எனக்கு உசிதமாகத் தோன்றுவதை நான் சொல்லுகிறேன். முதலாவது, வேட்டையாடுவது, மதுபாநம், சொக்கட்டான் விளையாடுவது, ஸ்த்ரீபோகம் இந்த நான்கில் எதிலாவது ஓர் அரசன் அளவுக்கு விஞ்சி ஆஸக்தியை வைத்து விட்டால் அவன் அது விஷயமாகச் செய்வது எல்லாம் அதர்மமாகிவிடு மென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். துர்யோதநன் முதலானவர்கள் அந்தக் கோஷ்டியில் சேருகிறபடியால் அவர்கள் செய்த கார்யம் சாஸ்த்ர ஸம்மதமாகாது; அவர்கள் அடைந்த ஜயமும் ஜயமன்று. இரண்டாவது - த்ரௌபதி, தர்ம புத்ரருக்கே சொந்தமல்லள்; ஆகையால், அவர் அவளை ஆட்டத்தில் பந்தயம் வைத்தது ஏற்காது. மூன்றாவது - தர்மபுத்ரர் தம்மை முதலில் பந்தயம் வைத்துத் தாம் தோல்வி யடைந்த பிறகு இவளைப் பந்தயம் வைத்தார். தாம் ஜயிக்கப்பட்டபிறகு அவருக்குச் சொந்தமானதும் உண்டோ? நான்காவது - தர்மபுத்ரர் தாமாகவே இவளைப் பந்தயம் வைக்கவில்லை; பந்தயத்தை அபேக்ஷிக்கும் மோசக்காரரான எதிரிகளால் ஏவப்பட்டு இவளை வைத்தார். இவை யெல்லாவற்றையும் ஆலோசிக்கும் நான், த்ரௌபதியை ஜயித்து விட்டதாக இவர்கள் சொல்லிக்கொள்வதைப் பெரிய அக்ரமமாகவே நினைக்கிறேன்.’

இவ்வாறு விகர்ணன் சிறிதும் பின்வாங்காமற் கூறிய இந்த வார்த்தையைக் கேட்டு, தாங்களும் இந்த மாதிரியாகவே உணர்ந்

தும், தைரியம் போதாததனல் பயந்திருந்த மற்ற ஸப்யர்கள், விகர்ணனை ஸபாஜநம் செய்து துர்யோதநனை மிகவும் நிந்தித்தார்கள். ஆனல், அஶக்தர்களின் ஆக்ரோஶம் என்ன பயன் பொருட்டு ஆகும்? பீஷ்மர் இந்த மாதிரி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அது வீண்போகுமோ?

இந்த ஸதஸ்ஸில், தர்மாதர்மம் தெரிந்தும் அதை வெளியிடக்கூடிய தைர்யம் பொருந்தியுமுள்ள இன்னும் ஒரு மஹாத்மா இருந்தார். அவர், துர்யோதநாதிகளின் சிறிய தகப்பனுகிய விதுரர் என்பவரே. அவருக்கு இந்த அக்ரமம் கொஞ்சமேனும் ஸஹிக்கக் கூடவில்லை. “द्रौपदी प्रश्नमुक्त्वैवं रोरवीति त्वनाथवत् । न च विब्रूत तं प्रश्नं सभ्या धर्मोऽत्र पीड्यते” ‘[ஹே ஸதஸ்யர்களே! த்ரௌபதீ ந்யாயத்திற்காக இப்படிக் கதறுவதை நீங்கள் பார்த்தும் உதாஸீநர்களாக இருப்பது தர்மமாகுமா?]’ என்றும், “यो हि प्रश्नं न विब्रूयाद्धर्मदर्शी सभां गतः । अनृते या फलावाप्तिः तस्याः सोऽर्धं समश्नुते” ‘[ஸப்பனென்று ஸபைக்கு வந்திருக்கும் தர்மமறிந்த ஒருவன் ஏதாவது ஒரு காரணத்தால் ப்ரஶ்நத்தின் ஸமாதாநத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லாமல் இருந்துவிட்டால் அவன் பிசகான தர்மஞ் சொல்லுகிறவனுக்கு ஏறக்குறைய ஸமமான குற்றவாளியாகிருன்]’ என்றும் தர்மம் உரைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஸப்யர்களின் மநஸ்ஸில் வற்புறுத்தி, அது காரணமாகவே ஓர் இதிஹாஸத்தையுஞ் சொல்லிவிட்டு, ஸ்ரீ விதுரர், “एतद्वै पार्थिवाः सर्वे श्रुत्वा सधर्मं सभासदः । यथा प्रश्नं तु कृष्णाया मन्यध्वं तत्र किं परम्” [‘ஸப்யர்கள் எல்லாரும் காமம் க்ரோதம் பயம் முதலியவற்றைத் தூர விலக்கிவிட்டு த்ரௌபதீ கேட்ட ப்ரஶ்நத்திற்கு அவஶ்யம் உத்தரம் கொடுக்க வேணும்’] என்று நிரம்பவும் ப்ரார்த்தித்தார். இந்த ப்ரார்த்தனைக்கும் இணங்காமல் பீஷ்மர் நின்றதற்குக் காரணம் என்ன? விதுரர் சொன்ன இதிஹாஸம் பிசகா? விகர்ணன் எடுத்து உரைத்த விஷயங்களும் அபத்தங்களோ? த்ரௌபதியைத் துர்யோதநன் அடிமையாகக் கொள்வது ந்யாய்யமென்றே இவருடைய நினைவோ? இதைக் கொஞ்சம் விசாரிக்கவேண்டும்.

முதலாவது - தர்ம புத்ரரை த்யூதத்திற்காக வரவழைக்குங்காலத்தில் த்ருதராஷ்ட்ரர், "[illegible]" ['வினையற்ற த்யூதம் நடக்கப்போகிறது; அதற்காக எல்லாரும் வரவேணும்'] என்று சொல்லி அனுப்பினர். இப்படி ஸுஹ்ருத் த்யூதமாக ஆரம்பித்துப் பிறகு விஷமத்யூதமாக முடிந்ததைப் பீஷ்மர் தர்ம்யமாகவே நினைப்பரோ?

இரண்டாவது - தர்ம புத்ரர் இந்த ஆஹ்வாநத்தை அங்கீகரியாமல் உபேக்ஷித்துவிடுவது அவருடைய வ்ரதத்திற்கு விருத்தம்; "[illegible] வ்ரதம் மே" என்றும், "ந [illegible] வ்ரதம் ஹி மே" என்றும் அவர் தம்முடைய வ்ரதத்தை வெளியிட்டிருக்கிறார். த்யூத மதத்தால் மதித்துத் தர்மபுத்ரர் இந்த த்யூதத்தில் ப்ரவ்ருத்தித்திருந்தால், அவருக்கு நேர்ந்த கஷ்டமெல்லாம் அவருக்குத் தகுந்தனவாகவே இருக்கும். அப்படிக்கு இல்லையென்பது பீஷ்மருக்குத் தெரியாத விஷயமா?

மூன்றாவது - த்யூதம் ஆரம்பிக்குங் காலத்தில், 'யார் என்னுடன் எதிர்த்துத் தேவநம் செய்யப் போகிறார்கள்?' என்று தர்மபுத்ரர் கேட்டதற்கு, துர்யோதநன் தான் பந்தய தநம் கொடுக்கப் போகிற தாகவும், தன்னுடைய மாதுலனான சகுநி தனக்காக ஆடுவதாகவும் சொல்ல, அது பிசகு என்று தர்ம புத்ரர் ஆதியிலேயே ஆக்ஷேபித்திருக்கிறார். "[illegible] விஷமம் ப்ரதிபாதி மே। [illegible] வ்யவஸ்யதாம்". இந்த ஆக்ஷேபத்தைப் பீஷ்மர் அறியாரோ?

நான்காவது - த்ரௌபதீ தன்னை முதலில் ஸபைக்கு அழைக்க வந்த ப்ராதிகாமியைப் பார்த்துக் கேட்டபடி, ["[illegible]"] மனைவியைப் பந்தயம் வைத்து ஆடுவதைச் சட்டம் அங்கீகரிக்குமோ?

தவிரவும், "[illegible]" என்று த்ரௌபதீ கேட்டபடி பூர்வம் ஜயிக்கப்பட்ட தர்மபுத்ரர்

பிறகு மற்றொரு சொத்தைப் பந்தயம் வைக்க அர்ஹர்தானோ? அந்தப்பந்தயம் செல்லுமோ? இதற்கு ப்ரத்யுத்தரத்தை ஸர்வமும் அறிந்த பீஷ்மர் அறியாரோ?

இவையெல்லாம் தெரிந்திருக்கையிலும் பீஷ்மர் தர்மம் தெரியவில்லையென்று சொன்னதற்குக் காரணந்தான் என்? ஏதோ ஒரு ஸூக்ஷ்ம தர்மம் இருந்தே பீஷ்மரை இப்படி நடத்தி யிருக்க வேணும். நம்முடைய புத்திக்கு எட்டின வரையில், பின் சொல்லப்படும் இரண்டு காரணங்களில் ஏதாவது ஒன்றைப் பலீயஸ்ஸாக அவர் நினைத்திருக்கவேணு மென்றே தோன்றுகிறது: — (1) தர்ம புத்ரரிடத்தில் பீஷ்மர் வைத்திருந்த கௌரவ புத்தி, அவர்செய்த கார்யத்தில் அதர்மத்தை உணர வொட்டாமல் பீஷ்மரைத் தடுத்திருக்கலாம். ஆகையினால்தான், 'த்ரௌபதியின் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநஞ்சொல்லத் தர்மபுத்ரரே ப்ரமாணம்' என்றும், 'தர்ம புத்ரர் ஜிதோऽஸ்மி என்று அங்கீகரித்து நிற்கிறபடியைப் பார்க்க எனக்கு ஒன்றும் தோன்றவில்லை' என்றும் பீஷ்மர் பலதடவை சொல்லியிருக்கிறார். இப்படி இந்த மாதிரி ஸமயங்களில் ப்ரமிப்பது எப்படிப்பட்ட புத்திஶாலிகளுக்கும் ஸஹஜமே. (2) துர்யோதநன் ராஜாவாகவும் தாம் அந்த ராஜ்யத்திலிருக்கும் ப்ரஜைகளில் ஒருவராகவும் நிரூபித்து, அந்த ஸம்பந்தத்தால் துர்யோதநன் செய்யும் கார்யங்களில் தோஷ புத்தியைத் தாம் வெளிப்படுத்துவது தர்ம விரோதமென்று பீஷ்மர் எண்ணியிருக்கலாம். யுத்தம் ஆரம்பிக்குங்காலத்தில் துர்யோதநன் பக்கத்தில் ந்யாயமில்லையென்று உணர்ந்திருந்தும் இந்தக் காரணத்தாலேயே அவன் கக்ஷியில் நின்றுகொண்டு பீஷ்மாதிகள் யுத்தம் செய்தார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆகையால், ராஜத்ரோஹ ஶங்கை இப்படி அவரை ப்ரேரித்திருக்கலாம். ஆனால், இது ஸமஞ்ஜஸமாகுமோ? "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம:" என்கிறபடி, ஏதோ நம்மால் அறியக்கூடாத தர்மம் இருந்திருக்கவேணுமே தவிர, பீஷ்மரின் அநுஷ்டாநம் பிசகு என்று சொல்வதற்கு நாம் துணியமாட்டோம். ஆனாலும், த்ரௌபதி பட்ட க்லேஶங்களை நினைக்கும்பொழுது மநஸ் கொஞ்சம் கலங்கவே கலங்குகின்றது.

ஓர் பௌராணிகன்.

109

ஸ்ரீ:

# கேவல ஆசாரம்.

## (1)

ஸ்ரீ வேதாந்த தீபிகை ஶ்ரத்தாளுக்களான ஆஸ்திகர்களுக்கு அத்யந்தம் உபயுக்தமாக இருக்கிறது என்பதில் ஆக்ஷேபமில்லை. அதன் உபயோகம் இன்னும் அதிகரிக்கும்பொருட்டு அடியேன் ஒரு விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகிறேன். அந்த விஜ்ஞாபநத்தை இந்தப் பத்ரிகையைப் படிக்கும் வித்வத்ரத்நங்கள் க்ருபையாகத் தலைக்கட்டிவைக்கவேணு மென்று நிரம்பவும் ப்ரார்த்திக்கிறேன்.

நாம் எல்லாரும், பகவானுடைய ஆஜ்ஞை யென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும் ஶ்ருதியையும் ஸ்ம்ருதியையும் நம்முடைய ஆசாரத்திற்கு ப்ரமாணங்களாக ஒப்புக்கொண்டு இருக்கிறோம். அந்த ப்ரமாணங்களிற் சொல்லப்பட்டிருப்பதற்கு விருத்தமாக அநுஷ்டிப்பதும், அவைகளிற் சொல்லப்படாமலிருக்கும் அநுஷ்டாநங்களை ஶாஸ்த்ரீயங்களென்று ப்ரமித்து அவைகள் அவஶ்யம் அநுஷ்டேயங்கள் என்கிற எண்ணத்துடன் அவைகளை அநுஷ்டிப்பதும், நமக்குத் தர்மமாகா. விருத்தமாக அநுஷ்டிப்பவர்களைப்பற்றிப் பேசுவது இப்பொழுது அடியேனுடைய எண்ணமன்று. வைதிகர் என்று பெயர் பூண்டு பாஷாந்தர கந்தமும் அறியாத சில ஸுதியர்கள் ப்ரமாண ஹீநமான சில அநுஷ்டாநங்களை ஶாஸ்த்ரீயம் போல ஶ்ரத்தையுடன் அநுஷ்டித்து வருகிறார்களே! அப்படி அநுஷ்டிக்காதவர்களை, வேறு விதத்தில் அவர்களிடத்தில் இருக்கும் குணங்களைக்கூடப் பாராமல், பாஷண்டிகள் என்றும் லௌகிகரென்றும் நிரஸிக்கிறார்களே! இது ந்யாய்யமா? என்பதை மாத்திரம் விசாரிக்க அடியேன் ப்ரவ்ருத்திக்கிறேன். ஶாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட்ட அடியேனை வாதத்திற்கு அநர்ஹனாகப் பெரியோர் திரஸ்கரிக்கக் கூடாது. ப்ரமாண புரஸ்ஸரமாகச் சொல்லப்படும் எல்லாவற்றையும் அங்கீகரிக்க ஸித்தமாகக் காத்திருக்கிறேன்.

‘ஶிஷ்டர்களால் அப்யுபகமம் செய்யப்பட்ட அநுஷ்டாநங்களில் தோஷ புத்தியைச் செய்யலாமா? அவைகள் எவ்வளவு ப்ரமாண ஹீநங்களாக இருந்

தாலும் ஶிஷ்ட பரிக்ரஹ மாத்ரத்தாலேயே அங்கீகார்யங்கள் ஆகவில்லையா?' என்று கேட்கலாம். இப்படி சோத்யம் செய்வது ஸங்கதமன்று. கேவலம் ஆசாரம் ஒரு அநுஷ்டாநத்திற்கு ஸாதுத்வத்தைக் கொடுக்காது என்றும், ப்ரமாணமில்லாவிட்டால் தர்மம் அநுஷ்டேயமன்று என்றும் பெரியோர் சொல்லியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஸ்ம்ருதிகளில் அநேக அநுஷ்டாநங்கள் ப்ரமாண ஹீநங்கள் என்றும், அந்த பரம்பரையாக வந்துவிட்டனவென்றும் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஸமீபகாலத்தில் 'ஸ்ம்ருதி ஸங்க்ரஹம்' என்னும் ஸச்சரித்ர ஸுதா நிதியைச் செய்த வைதிகோத்தமர் க்ரந்தத்தின் ஆரம்பத்தில் கேவலாசார போதக ஶ்லோகங்கள் என்று சில ஶ்லோகங்களை அருளிச்செய்து "𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍇𑌵𑌲𑌾𑌚𑌾𑌰𑌂 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑌿 𑌵𑌶𑍍𑌯𑌤𑍇" என்றும், "𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌾𑌗𑌤𑌾 𑌆𑌚𑌾𑌰𑌾 𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌕𑌾𑌸𑍍𑌤𑍇𑌵𑌿 𑌵𑌿𑌚𑌾𑌰𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌵𑌿। 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 𑌵𑌶𑍍𑌯𑌤𑌾𑌂 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃" என்றும் அந்த ஆசாரங்களை அநுபாதேயங்களென்று கண்டித்திருக்கிறார். இதுவே, அடியேன் செய்யும் ப்ரவ்ருத்தியில் தோஷமில்லையென்பதை நன்றாக விளக்கும்.

இப்படி இவர் கண்டித்திருக்கையிலும் இன்னும் அந்த அநுஷ்டாநங்கள் நம்மை விட்டு விலகாமல் நிற்கின்றன என்பதைக் காண்பிக்க அவர் குறித்திருக்கும் சில ஆசாரங்களைக் கூறுகிறேன். "𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵𑍈𑌕𑌂 𑌕𑍈𑌕𑌾𑌰𑍍𑌦𑍍𑌧𑌂 𑌕𑍈𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂" என்று த்ராவிட காதா ஸேவா காலங்களில் ஒரு வாக்யத்தை விட்டு மற்றொரு வாக்யத்தை அநுஸந்தாநஞ் செய்வதை அஸாதுவென்றே அவர் படித்திருக்கிறார். இப்பொழுது இருக்கும் அத்யாபக ஶிரோமணிகள் கர்ணருந்துதமாக இம்மாதிரி அநுஸந்தாநஞ் செய்வதை அதிமாத்ரம் போக்யதமமாக நாம் எல்லாரும் கொண்டாடுகிறோம். "𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌂 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑍈𑌃 𑌷𑍁𑌸𑍍𑌵𑌿" என்று தநுர்மாஸ ஆராதநகாலங்களில், விதிப்ராப்தமாகவும் ப்ராஹ்மண்யத்திற்கு முக்கிய ஹேதுவாகவு மிருக்கும் ஸந்த்யாநுஷ்டாநங்களை அநாதரித்து, திருவாய்மொழிப் பாசுரங்களைப் பாடிநிற்பது அதர்மமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சில வைதிகர்கள் இப்பொழுதும் அதை விடாமல் கைப்பற்றியிருக்கிறதை நாம் பார்க்கிறோம். "𑌶𑍍𑌵𑌶𑍍𑌰𑍂 𑌨𑌨𑌾𑌨𑍍𑌦𑍃 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍁𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌭𑌕𑍍𑌷𑌣𑌂। 𑌦𑍇𑌶𑌾𑌚𑌾𑌰𑌂 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌭𑌾𑌷𑌣𑌂" என்று நாட்டுப்பெண்கள் தங்கள் பர்த்ரு ஸம்பந்தமான உறவினர்களின் உச்சிஷ்டத்தைப் போஜநஞ்செய்வதையும், அவர்கள் நல்லவர்களாக

இருந்தாலும் அவர்களுடன் ஸம்பாஷணம் செய்யக்கூடாது என்று நிஷேதிப்பதையும், அஸத்துக்களான மற்ற ஜநங்களுடன் ஸம்பாஷணம் செய்யலாமென்று அங்கீகரிப்பதையும் பிசகாகவே சொல்லியிருக்கிறார். ஏதோ ஸுக்ருத வஶத்தால் உச்சிஷ்ட போஜநம் மாத்திரம் நின்றுவிட்டது; ஸம்பாஷண நிஷேதம் அவ்வளவாகப் போகவில்லை. ஆனாலும், இந்த அநுஷ்டாநங்கள் மாறிவிட்டதைப் பற்றி மிகவும் துக்கிக்கும் வைதிகர் இன்னும் இருக்கிறார். இந்த மாதிரியான அநேக தவறான அநுஷ்டாநங்கள் அவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை மாற்றி ப்ரமாணத்துக்கு ஒத்தபடி அநுஷ்டாநத்தை நிலைநிறுத்துவதே ஓர் பெரிய சீர்திருத்தமாகும். இந்த விஷயத்தில் வித்வாங்கள் கொஞ்சம் ஶ்ரத்தை எடுத்துக்கொள்ள வேணுமென்பது தான் அடியேனுடைய ப்ரார்த்தநை.

அத்யவஶ்யமாகச் சீர்திருத்தத்தை அபேக்ஷிக்கும் அநுஷ்டாநங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் ஒன்றைப்பற்றி மாத்திரம் இப்பொழுது ப்ரஸ்தாவிக்கிறேன். ஸத்வோத்தரரான சிலர், பராந்ந போஜநத்தை வர்ஜ்ஜிப்பதாகிற ஒரு நியமத்தை வஹித்து வருகிறார்கள். இது மிகவும் ஶ்லாகநீயமே. ஸத்வ ஶுத்தியும் த்ருவமான ஸ்ம்ருதியும் ஆஹார ஶுத்தியைப் பொறுத்திருக்கிறதாகையால், அந்த ஆஹாரஶுத்திக்கு ஸாதகமாக இருக்கும் நியமங்கள் எல்லாம் ஆஸ்திகருக்கு அபேக்ஷிதங்கள்தான். ஆனால், இந்த நியமத்தை வஹிக்கிறவர்கள் சிறிதேனும் குணதோஷ விசாரம் செய்யாமலே ஆலயாதிகளில் பகவத் ப்ரஸாதம் என்று சொல்லப்படும் அந்நத்தை ஸ்வீகரிப்பதை நாம் பார்க்கிறோம். வ்ராத்யனாக இருக்கும் பாசகனால் ஸ்நாநாதிகள் இல்லாமலும் பெருத்த அஶுத்தியுடனும் பாகம் செய்யப்பட்டு, பகவந்நிவேதநம் என்னும் பாவனை செய்யும் முன்னமேயே அந்யதா விநியுக்தமாக இருக்கும் அந்நத்தின் ஶேஷத்தைப் பரிஶுத்தமான அந்நமென்று ஸ்வீகரிக்கிறார்களே! இது ந்யாயமாகுமோ? இவர்களுடைய அபிப்ராயம் என்ன? ஆலயத்துக்குள் எவ்விதமான அக்ரமம் நடந்தாலும் அந்த அந்நம் ஶுத்தம் என்பது தானா? அப்படிக்கிருந்தால் அதற்கு ப்ரமாணத்தைப் பெரியோர்கள் ஸாதிக்கவேணும். அப்பொழுது ஹீநஜாதீயர்கள் பாகம்செய்தாலும், ஆலயத்திற் செய்யப்பட்டது என்று பகவானுக்கு நிவேதநம் செய்யவும், நாம் உத்தேஶ்யத்வேந ஸ்வீகரிக்கவும் ப்ரஸங்கிக்கலாமே. அது இஷ்டந்தானா?

'ஆலயங்களில் அக்ரமம் நடந்தாலன்றோ இந்த விசாரத்துக்கு அவகாஶம்? இங்கே சொல்லப்பட்டிருக்கிறது அத்யுக்தி' என்று ஒருவரும் திருவுள்ளம் பற்றக்கூடாது. அடியேன் விஜ்ஞாபநஞ் செய்து கொண்டிருக்கும்

விஷயத்தில் கொஞ்சமேனும் அத்யுக்தி இல்லை. அநேக ஸ்தலங்களில் கீழ்ச் சொல்லப்பட்ட அதர்மங்கள் நடக்கிறதை நிருபணஞ்செய்யலாம். கைங்கர்ய பரர்களில் ஸாதுக்கள் இல்லையென்றுவது, கைங்கர்யபரர்கள் என்கிற காரணத்தாலேயே அவர்கள் தோஷ துஷ்டர்களென்றுவது அடியேன் சொல்ல வரவில்லை. அநேகமாக அடியேன் பார்த்திருக்கும் ஸ்தலங்களில் அஸஹ்யமான அஶுத்தி நடக்கின்றது. பகவந்நிவேதநத்திற்காக உத்தேஶிக்கப்பட்ட சொத்துக்களை நிவேதநாத்பூர்வமேவ ஆத்ம ஸாத் கரண மாகிற திருட்டும், இன்னும் வாக்கால் சொல்லக்கூடாத அத்யந்தம் ஜுகுப்ஸாவஹமான நடவடிக்கைகளும் கோவில்களுக்குள் நடக்கின்றன வென்பது ப்ரஸித்தமே. "யயா யஶ்வா நம ராஜா நம யயா வ ஊஉ ஹஸிநழ" என்கிறபடி மஹாராஜாவையும் மதம் பிடித்த யானையையும் அணுகுவதுபோலவன்றோ தைவத்தை நாம் அணுகவேணும்? அப்படிக்கல்லாமல் மஹத்தான ஔதாஸீந்யத்துடனும் அப்ராயஶ்சித்தீயமான பாபத்தைச் செய்துகொண்டிருக்கும் கையுடனும் அர்ச்சகாதிகள் பூஜை செய்தால் அந்த ஸந்நிதியில் தீர்த்த பரிக்ரஹம் செய்யலாமா? மநஃபூர்வமாகப் பாசகன் அஶுத்தன், அந்நமும் அஶுத்தம் என்று தெரியுமிடத்தில் அந்நத்தை ஸ்வீகரிக்காமற் போவது தோஷமாகி விடுமோ? ஏன் வைதிகர்கள் இவைகளை யெல்லாம் தோஷமாக எண்ணாமல் அப்யவஹாராதிகளை இந்த மாதிரியான ஆலயங்களில் வைத்துக்கொள்ளுகிறார்கள்? 'அஶுத்தி இராது என்கிற எண்ணத்துடன் இப்படி அநுஷ்டிக்கப்படுகிறது' என்று சொல்ல முடியாது. வ்யக்தமாகத் தெரிந்திருக்கையிலும் வைதிகர் இப்படிப் புகுருவதை அடியேன் ஆயிரக் கணக்காகக் காண்பிப்பேன்.

இந்த அநுஷ்டாநத்திற்கு ஸரியான ஸமாதாநத்தை வைதிகர்கள் நிர்மத்ஸரர்களாக அநுக்ரஹிக்கவேணும். ஸரியான ஸமாதாநம் இல்லாவிட்டால், ஹோட்டல்களில் வர்ஜ்யா வர்ஜ்யமில்லாமல் இந்த்ரிய த்ருப்தியையே ப்ரதாநமாக நினைத்து ஸாப்பிட்டு வளரும் நமது லௌகிகர்களைவிட இந்த வைதிகர்கள் ஒரு விதத்திலும் சிறந்தவர்களல்லர் என்றே சொல்லவேண்டி வரும்.

ஓர் வைதிகன்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

(1)

## ஸ்ரீ ராகவன் ப்ரதிஶயநம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ ராகவ ப்ரதிஶயந விஷயமாக அடியேன் செய்த ப்ரஶ்நங்களை ஸ்ரீ நரஸிஹ்மாசார்யர் ஸ்வாமி அங்கீகரித்துப் பதில் நியமித்த விஷயங்கள், அடியேனுடைய தாத்பர்யத்தை ஸ்வாமிக்குத் தெரிவிக்கும்படி ப்ரேரிப்பிக்கின்றன. ஆகையால், அதை இப்பொழுது ஸங்க்ரஹமாக ஜ்ஞாபித்துவிட்டு விரதனுகிறேன்.

(1) "ப்ராஹ்மணோ ஹ்யக..." "யநஹீநோ யயாத்விஜ:" என்கிற ஶ்லோகங்களி லிருக்கிற த்விஜப்ராஹ்மண ஶப்தங்களுக்கு ஐகார்த்ய ப்ரதிபாதகமான வ்யாக்யாந த்ரயமும், 'ப்ராஹ்மண..." என்கிற பூர்வார்த்தத்திற்கு த்ருஷ்டாந்தத்வே ப்ரமாணங்கள். 'ஹி' ஶப்தமும் ஔபம்யத்துக்கு த்யோதகமாகும்.

(2) "உதயோரம்ஜயம் க்ருத்வா பாஹூஸவ்யய ப்ராஜ்ஞவஸ்து ப்ரதிஶேத்" என்கிற கோவிந்த ராஜீய வ்யாக்யாநத்தை எல்லாரும் அங்கீகரித்திருப்பதனுலும், அர்ச்சா ஶயநமும் தத்ஸமமானமாணுல் விரோதமில்லாததனுலும் ஸ்வாமி இஷ்டப்படி வ்யாக்யாநம் பண்ணவில்லை. பேதகங்களான ஶப்தாந்தராதிகளையும் காணேம்.

• (3) "ஸாக வாஶ்லுதி ப்ரதத்வவெஸ யஶோதரோ வஸுக்ஷணம் ஸநந க்ஷத்ரி யாணாமேதக்ஷ க்ஷமணே ப்ராய ஶ்ரிதவதிதி ஸஞ்சிதம்" என்கிற வ்யாக்யாந பங்க்தியைப் பார்க்கும் ஸ்வர்

மிகளுக்கு, 'ஸ தச' என்கிற ஶப்தம் ப்ரத்யுபவேஶத்தையே சொல்லு மென்றும், அப்படி ஒரு அங்கி உண்டு என்றும், ஸகலவாஸ்து ஸ்ய நாம்யமானது மற்றும் சில ப்ரதிஷியதாங்கங்களை உபலக்ஷிக்கிறது என்றும் விளங்கும். இது வரையில் 'ப்ரத்யவவேஶ' ஶப்தம் உபய வாதி ஸம்ப்ரதிபந்நார்த்தத்தை நிஶ்சயித்துச் சொல்லாமையினால் 'ஸ தச' ஶப்தம் வழிமறிப்பைச் சொல்லாது.

(4) "உஹ்ராஸ்தரணம் உாவநகவாயம்" என்கிற வ்யாக்யானத்திலிருக்கும் 'வாவந' ஶப்தம் 'வெஶாஜிந கூவொாஸ்தரம்' என்கிற இடத்தில் வ்யாக்யாநம் செய்திருப்பது போல அங்கார்த்தமாக இருந்துகொண்டு ஆநுஷங்கிக ஶக்தியைச் சொல்லுகிறது என்று சொல்வதில் விரோதம் என்ன?

(5) ப்ரமாணங்கள் எல்லாவற்றையும் நிர்மத்ஸரராய்ப் பார்ப்பவர்களுக்குப் பரதன் அநுஷ்டித்தது ஶாஸ்த்ரீயவ்ரதமென்று ஸ்புடதரமாய் ஏற்படும்.

(6) பரதனிடத்தில் ஸ்ரீராமனுக்கு அபிஷிக்தபுத்தி வராது என்று ப்ரமாண புரஸ்ஸரமாக எழுதியிருந்தேன். கூஷ்வு ஸர்க்கம் முழுவதும், பரதன் 'நான் ராஜ்யத்தை வஹிக்கவில்லை, நீரே வஹிக்க வேணும்' என்று ப்ரார்த்தித்ததற்கு முன் சொல்லப்பட்டது; அதற்குப் பிறகு சொல்லப்படவில்லை என்பதை ஸ்ரீ நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி கொஞ்சம் கவனிக்க வேணும்.

கண்கொடுத்த வணிதம் 7 - 4 - 12. } பு. ஸ்ரீநிவாஸாசார்யன்.

[இந்த வாதத்தை இனி நிறுத்திவிட வேணுமென்று இரண்டு ஸ்வாமிகளையும் ப்ரார்த்திக்கிறோம். ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபர்.]

## (2)

## பகவத் விஷயம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

இந்த ஸம்வத்ஸரத்தின் முதல் ஸஞ்சிகை 30 - வது பக்கத்தில் ஸ்ரீ. உ.ப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸாதித்திருக்கும் பகவத் விஷயத்தைப் பற்றிய உபந்யாஸ ஸங்க்ரஹத்தைப் பார்த்து மிகவும் த்ருப்தியை அடைந்தேன். அதில் 'பகவத் விஷயம்' என்னும் பதத்திற்கு ஸ்வாமி நிர்வசநம் ஸாதித்திருக்கிறது புதிய உல்லேகமாயும் யுக்தியுக்தமாயும் இருக்கின்றது. ஆனால், அடியேனுடைய சிற்றறிவில் சிற்சில ஸந்தேஹங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகளை க்ருபையுடன் நிவ்ருத்திசெய்யவேண்டுமென்று ஸ்வாமியை ப்ரார்த்திக்கிறேன்.

“ஏவம் ஶ்ரீஶாந் ஸ்வஶிஷ்ட: கரணதிதிவஶாத் நந்த்யோக்யம் ஸஹ்யம் ஸேவ்யத்வாதீந் உபாயத்வாந்த் ப்ராப்யமிஹ ஶதகே வக்தி தத்ஸ்வாபநாயந்தாந்” என்று தாத்பர்ய ரத்நாவளியின் ஆரம்பத்திலும், முடிவிலும் “இத்த்தம் ஸேவ்யம் ஸமாஹாஶ்யம்” என்றும், முதற்பத்தின் முடிவிலும் “க்ஷோநாத ஶதகே ப்ரேயம் ஸேவநீயம்” என்றும், த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் “ஸேவாயோக்யோऽதிபோக்ய:” என்றும், “ப்ராஹ ஸேவாயோக்யம் ப்ராயஶ்ஶதகே வீக்ஷ்ய பாதம்” என்றும் அருளிச்செய்திருக்க, ஸ்ரீ ஸ்வாமீ “முதல்நூறு பாசுரங்களினால் பரத்வாதி குண பூர்ணனுகையினால் அவனே பரமோபாய னென்றும்” என்று திருவுள்ளம்பற்றினதற்குக் காரணம் அடியேனுக்குத் தெரியவில்லை. “ஆத்யே பஶ்யந்நுபாயம் ப்ராஹ்ணிஹ பாதே ப்ராப்யம் ஸம்க்ஷேபம் ஸ்வதீயே” என்று ஓர் இடத்தில் ஸேவ்யத்வத்தையும் மற்றோரிடத்தில் உபாயத்வத்தையும் அருளிச்செய்திருப்பதனால் இவை இரண்டும் ஒன்றென்று நினைப்போமென்றாலும், உபாயத்வம் உபேயத்வம் இவையிரண்டும் ஸாத்யமாகவும், அவைகளுக்கு ஸேவ்யத்வம் முதலான பத்துக் குணங்கள் ஸாதநங்களாகவும் “ஏவம் ஶ்ரீஶாந்” என்கிற தாத்பர்ய ரத்நாவளி ஶ்லோகத்தில் அருளிச்செய் திருக்கிறபடியாலும், த்ரமிடோபநிஷத் ஸாரத்தில் “உபாயத்வைககாஷ்ட்யம் ப்ராதிஹ ஸேவ்யத்வ ஶ்ருதிதம்” என்று உபாயத்வத்திற்கு ப்ராப்யமாக நிர்த்தேஶித்தி

ருக்கையாலும், "உவாயகவாயதாநு வ்ருயமஸதகௌஉஹாவஹ்த வி ஹோ:" என்கிற த்ரமிடோபநிஷத் ஸார ஸ்லோகத்தின் வ்யாக்யாநத்தில் சந்த்ரகிரி வேங்கடேஶ தேஶிகன் 'ஸேவ்யத்வாக்ஷிப்த உபாயத்வத்தை த்ருடீகரித்தருளினர்' என்று அருளிச்செய்திருக்கையாலும் அப்படி நினைப்பது உபபந்நமாகாது என்று தோன்றுகிறது. மேலும், "ஸூஶா விஷ்ணும் வரகவாசு" என்கிற முதற் பத்து தாத்பர்ய ரத்நாவளி ஸ்லோகத்தாலும், "வரகவாமெஹ்ஶ் ஸிஷ்ணும்" என்கிற த்ரமிடோபநிஷத் ஸார ஸ்லோகத்தாலும் பரத்வாதிகளான பத்துக் குணங்களும் ஸேவ்யத்வஸாதகங்களாகவே அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால், "ஸூமெஹ் வஶஹ் நூவாபம்" என்கிற ஒரு ஸ்லோகத்திலும் பரம்பரயா ஸாத்யமாயிருப்பதைக்கொண்டு இப்படி அருளிச் செய்யப்பட்டிருக்கிறது என்றே சொல்லவேணும்.

இரண்டாவது பத்திலும் அதிபோக்யத்வம் ப்ரதிபாத்யமென்று ஏற்படுகிறது. ஸ்ரீ தாத்பர்ய ரத்நாவளியில் இரண்டாவது கடைசி ஸ்லோகத்தில் "ஊதஹ் வ்ரஹுதாதஹ் வஹஹ் க்ஷண விரஹதயா" என்று ஆரம்பித்து, "ஶாஹ நிஶய தயா வாதி மஹாமஹ்ம் ஷிதீமெய" என்று அருளிச்செய்திருக்கிறார். த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் "தத்ஶூவ்ராவஹ்கவளவ யிகமேதி மஹாமஹ் கவமெவஜக" என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், 'நிரதிஶயபோக்ய னானபடியால் அவனே பரமப்ராப்ய னென்று' என்று ஸ்ரீ ஸ்வாமீ ஸாதித்திருப்பதும் ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது. முதற்பத்தில் ஆக்ஷேபகமான ஸேவ்யத்வத்தை விட்டுப் பரத்வாதிகளை ஸாதித்திருக்கிறபடியால், 'இந்த இடங்களில் ஆக்ஷிப்தங்களான உபாயத்வோபேயத்வங்களை நிரூபித்திருக்கிறது' என்று நினைக்கவும் ஸாத்யமில்லை.

தவிரவும், "ஷஹ்ரீ: ஸ்வாம் வம்வஶமெஹ் ரநிதரமதிதாமே வவமெக்ஷ ஶமநீம்ஜ்ர:", "உவாயகவம் யதச வ்ருயஶ ஶதகௌஉஹாவஹ்த விமஹா ரநமெநஹ்ாவாயஸ்த வ்ருயதி வரம் வம்வஶமே மெவ:" என்கிற த்ரமிடோபநிஷத்ஸார ஸ்ரீ ஸூக்திகளால் 5-ம் பத்து முதல் அநந்யோபாயத்வத்தை த்ருடீகரிக்கிறார் என்று ஏற்படுகிறது. வேறு ப்ராப்யம் இல்லை யென்பது நாலாம் பத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிறது

என்று „ஸௌசீல்யாத்யைஶ்வர்யாப்தேர் விஷயம் தாஸ்யாநந்த்ய ஹேதும் ஸ்துதீந்து” என்றும், „ஜ்ஞாநீ ஸம்பத்ஸ்யதே க்ருதக ஜஹ யஸ்தஸ்யா நிவார்ய: ஸஞ்சயம் தமேவஸ்வ ஸ்வயம்பதி தத்வேந்த்ரிய விஷயவா:” என்றும் த்ரமிடோபநிஷத் ஸார ஶ்லோகங்களினால் ஏற்படு கிற படியால், இங்கு 'மேல் எல்லா ஶதகங்களினாலும் அந்த ஈஶ்வரனைத் தவிர வேறு உபாயமுமில்லை, வேறு ப்ராப்யமுமில்லை யென்றும்' என்று ஸ்ரீ ஸ்வாமீ ஸாதித்திருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. ஒருகால் 'நாலாம் பத்தையும் சேர்த்துச் சொல்லி யிருப்பதால் விரோதமில்லை' என்று சொல்ல லாமோ வென்றால், 'அடுத்ததால் வேறு ப்ராப்யங்கள் எல்லாம் அநித் யங்கள் என்றும்' என்று நாலாம் பத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹித்தி ருக்கிறபடியால், அப்படி சொல்வதும் ஸாத்யப்படாது.

தவிரவும், 'முதற்பத்து முதல் 10 - பாசுரங்களால் ஆழ்வார் ஸர்வேஶ் வரனுடைய பரத்வாதிகளை அநுபவித்து விட்டு' என்று ஸ்ரீ ஸ்வாமி ஸாதி த்திருக்கிறார். இது ஸங்கத மாகுமோ? முதல் பத்துப்பாட்டுக்களுக்குப் பர த்வத்தை மாத்திரம் தானே ப்ரதிபாத்யமாக ஆசார்யன் அருளிச் செய்தி ருக்கிறார்? „பரம் நிர்தோஷம்”, „வஶ்யோ யோஷீ பரம்”, „மனஸ்த்வா ஸ்ரீஷு உபக ஸ்பேஷ” இத்யாதிகளால் இது நன்றாக விளங்குகிறதே! ஆகையால், ஸ்ரீ ஸ்வாமி 'பரத்வாதி' என்று 'ஆதி' ஶப்தம் ப்ரயோகம் செய்திருப்பதன் தாத்பர்யம் ஏற்படவில்லை.

இவைகளைத் தவிர இன்னும் அநேக ஸம்ஶயங்கள் இந்த உபந்யாஸத் தைப் படிக்கும் அடியேனுடைய மநஸ்ஸில் ஜநிக்கின்றன. விஸ்தர பயத் தால் இப்பொழுது அவைகளை எழுதவில்லை. விஜ்ஞாபநம் செய்து கொள் ளப்பட்டிருக்கும் ஸம்ஶயங்களுக்குத் தகுந்த ஸமாதாநத்தை ஸ்ரீ ஸ்வாமீ அரு ளிச்செய்து அடியேனுடைய அஜ்ஞாநத்தை நிவ்ருத்தி செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

திருவல்லிக்கேணி 10—4—12. }  சே. நரஸிம்ஹாசார்யர்.

ஸ்ரீ:.

# பிரிவுகளின் மாஸ அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

சென்ற மார்ச்சு மாஸம் 17 - ம் தேதி, 31 - ம் தேதியாகிற இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில், ஷை பிரிவின் ஸங்கங்கள் இரண்டு நடந்தன. இவைகளில் முதல்ஸங்கத்தில் ஸ்ரீ. சே. நரஸிம்ஹமாசார்யர்ஸ்வாமி திருப்பாவை மூன்றாவது பாசுரத்தைப் பற்றியும், இரண்டாவது ஸங்கத்தில் நான்காவது பாசுரத்தைப் பற்றியும் உபந்யாஸம் செய்தார். அநேக ஆஸ்திக ஶிரோமணிகள் வந்திருந்து உபந்யாஸத்தின் பெருமையை அநுபவித்துப்போனார்கள்.

இரண்டாவது ஸங்கத்தில் உபந்யாஸம் ஆன பிறகு, சற்றேறக்குறைய 5 - 30 மணிக்கு இந்தப் பிரிவின் அங்கத்தினருடைய கூட்டம் ஒன்று சேர்ந்தது.

அப்பொழுது பொதுக் கார்யதர்ஶியால் ஏற்கெனவே அனுப்பப்பட்டிருந்த 29 - 3 - 1912, 4 - ம் நம்பர் பத்ரிகை படிக்கப்பட்டு அதன் யுக்தாயுக்தம் விசாரம் செய்யப்பட்டது. கொஞ்ச காலம் சர்ச்சை யானபிறகு பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன :—

(1) ஸ்ரீ அழகிய சிங்கர் தமக்குப் பிறகு ஆஸ்தாநத்துக்கு எழுந்தருள வேண்டிய ஸ்வாமியை ஏற்படுத்தும் விஷயத்தில், பஹு காலமாக இந்த மடத்தில் நடந்து வரும் அநுஷ்டாநத்தை ஒத்தும், ஹை கோர்ட்டார் இது ஸம்பத்தமாகச் செய்திருக்கும் தீர்மானங்களில் வ்யக்தமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ந்யாயங்களை அநுஸரித்தும், முக்கியமான அநேக ஶிஷ்யர்களுடன் ஆலோசித்து அவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டபிறகு தான் தாம் ஒரு விதமான ஏற்பாட்டைச் செய்யவேணும்.

(2) சென்ற 1910 ௵ டிஸம்பர் மாஸத்தில் வெண்ணாற்றங்கரையில் நடந்த மஹாஸங்கத்தில் ஆஸ்தாநத்துக்கு அர்ஹர்களாகச் சொல்லப்பட்ட

மூன்று ஸ்வாமிகளுக்குள் அந்யதமரை ஸ்ரீ ஸ்வாமியாக ஏற்பாடு செய்வதின் ஔசித்யத்தை இந்த மதிராஸ் சைதாப்பேட்டைப் பிரிவின் அங்கத்தினர் அநுமோதித்து, அப்படியே ஏற்பாடுசெய்ய ஸ்ரீ ஸ்வாமி க்ருபை செய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறார்கள்.

(3) திருக்குடந்தை ஸ்வாமியின் பூர்வாஶ்ரமத்துக் குமாரராகிய உப. ஸ்ரீ-சக்ரவர்த்யாசார்யர் ஸ்வாமி, ஆஶ்ரமத்துக்கு அநுகுணமான வயஸ் வராதவராகவும், ஆஸ்தானத்துக்கு அநுரூபமான பாண்டித்யமில்லாதவராகவும், தாத்காலிகமாகக் குடும்ப ஸம்பந்தமான வ்யாஜ்யத்தில் அத்யந்தம் ப்ரவ்ருத்தராகவும் இருக்கிறபடியால், அவர் ஸர்வதா ஆஸ்தானத்துக்கு ஏற்படுத்தப்படக்கூடாது என்பதை இந்தப் பிரிவின் அங்கத்தினர் த்ருடமான அபிப்ராயமாகக் கொண்டிருக்கிறார்கள்.

(4) இந்த அபிப்ராயங்களை ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபநம் செய்துகொள்வதற்காகப் பின் குறிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்குப் புறப்பட்டுப் போக வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1. ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.
2. ,, வி. ராகவாசார்யர், பி. ஏ., பி. எல்.
3. ,, எஸ். வாஸுதேவாசார்யர், பி. ஏ., எல். டி.
4. ,, டி. வெங்கடராம ஐயங்கார்.
5. ,, ஆர். நரஸிம்ஹ ஐயங்கார், பி. ஏ.

சென்னை
31 - 3 - 12.

கார்யதர்ஶி.
(மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.)

---

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

"காஞ்சீபுரம் பரிஷத்."

"𑌤𑌰𑍍𑌕𑍋𑌽𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋 𑌵𑌿𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌨𑍈𑌕𑍋 𑌋𑌷𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 - 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂 𑌮𑌹𑌾𑌜𑌨𑍋 𑌯𑍇𑌨 𑌗𑌤𑌃 𑌸 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃". தர்ம நிர்ணயம் செய்யும் விஷயத்தில் மஹாஜநங்கள் போகும் மார்க்கமே மார்க்கமென்றும், கேவல யுக்தி முடிவற்றதானபடியாலும் வேத வாக்யங்களும் ரிஷிமதங்களும் பிந்ந பிந்நங்களாக இருக்கிறபடியாலும், தர்ம தத்வம் எளிதில் அறியக்கூடியதன்று என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; இதன் தாத்பர்யம் என்னவென்றால் - நாம் எல்லாரும் ஶாஸ்த்ரத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கையிலும் வ்யபதிஷ்டரான சிலரே ஶாஸ்த்ரார்த்தத்தை விசாரிக்க ஶக்தரானபடியால் அவர்கள் புகுரும் வழியையே ஸாதுவான மார்க்கமென்று மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டியது என்பதுதான். அவகாஶமும் ஶக்தியும் இருந்தால் ஶாஸ்த்ரத்தை விசாரிப்பதே உத்தமம்; அவை இல்லாவிடில், ஶாஸ்த்ரத்தை விசாரிக்க அர்ஹர்களாகவும் அப்படி விசாரித்தே நடக்கிறவர்களாகவுமுள்ள பெரியோர்களது அநுஷ்டாநத்தைப் பார்த்து நாமும் நடப்பதுதான் ந்யாய்யமாக இருக்கும். இதுதான் "𑌮𑌹𑌾𑌜𑌨𑍋 𑌯𑍇𑌨 𑌗𑌤𑌃 𑌸 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃" என்பதன் கருத்து. ஆனால், அடிக்கடி அநேக காரணங்களால் ஶாஸ்த்ர விசாரம் செய்பவர் குறைவுபட்டு, தர்மாதர்ம விவேகம் லுப்தமாகி, தவறான அநுஷ்டாநங்களெல்லாம் நடைபெற்றுவரக்கூடும். அவைகளை மஹாஜநங்

களுடைய மார்க்கமென்று எண்ணி நாம் அவற்றின் வழியே நடந்தால், அபதங்களில் ப்ரவ்ருத்தித்தவராவோம் என்பதில் ஆக்ஷேபமில்லை. இம்மாதிரியான க்ஷோபங்கள் வராமல் பாதுகாக்கும் பொருட்டு, அவகாசம் கிடைக்கும் பொழுதெல்லாம், ஜகத் ரக்ஷணத்தைக் கருதி யோக்யர்களான பெரியோர்கள் ஶாஸ்த்ர விசாரத்தில் முயல்வது அவஶ்யமே.

சென்ற பங்குனி மாஸத்தில் காஞ்சீபுரம் என்று சொல்லப் படும் பெருமாள்கோவிலில் ஸ்ரீ வரதராஜன்ஸந்நிதியில் ஶாஸ்த்ரார்த்தவிசாரத்தைச் செய்யக்கூடிய நமது பண்டித ஸமாஜம் சேர்ந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். நமது ஆசார விஷயங்களில் அநேக அநுஷ்டாநங்கள் ஜநங்களுடைய ஆநுகூல்யத்தின் பொருட்டு ஆகாமல் தீமையையே விளைவிக்கத்தகுந்தனவாக இருக்கின்றன வென்றும், ஶாஸ்த்ரம் ஸம்மதித்தாலும் ஸம்மதிக்காவிட்டாலும் ஜநங்களுடைய நன்மையைக் கருதி அவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டு மென்றும் எண்ணம் கொண்டிருக்கும் ப்ரபுக்களில் அநேகர், சில பண்டிதரிட மிருந்து தாங்கள் உத்தேசிக்கும் சீர்திருத்தங்களில் சிலவற்றை ஶாஸ்த்ரம் ஒப்புக்கொள்ளுகின்றது என்று கேள்விப்பட்டு அதை உறுதிசெய்து கொள்ளுவதற்காக இந்தப் பண்டித ஸமாஜத்தைப் ப்ரவர்த்திப்பித்தார்கள். இவர்களுடைய கோரிக்கைக்கு இணங்கி அநேக வித்வாங்கள் பலவிடங்களிலிருந்து வந்தார்கள். சிலர், இந்த ஸமாஜத்தில் நிஷ்பக்ஷபாதமாக ஶாஸ்த்ரார்த்த விசாரம் நடக்காது என்கிற ஒரு அதிஶங்கையை மநஸ்ஸில் கொண்டு 'வ்ருதாவாக ப்ரமப் படுவானேன்?' என்று நின்றுவிட்டார்கள். அப்படிக்கு நின்றும் மதத்ரய ஸாதாரணமாகச் சற்றேறக்குறைய நூறு வித்வாங்களடங்கிய ஸமாஜம் சேர்ந்தது. ஏற்கெனவே இந்த ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்கள், அர்த்த விசார காலங்களில் யாதொரு அநியமமும் வராமலிருக்கும்பொருட்டுச் சில விதிகளைச் செய்து, அவைகளை அநுஸரித்து ஸதஸ்ஸில் விசாரம்செய்வதற்காக ஏறக்குறைய முப்பது பண்டிதர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களைத்தவிர மற்ற ஒருவரும் ஸதஸ்ஸில் பேசக்கூடாது என்றும், விசாரத்தின்

குணதோஷங்களை நிர்ணயம் செய்யவும் மற்ற ஸதஸ் ஸம்பந்த மான யாஜமாந்யத்தை வஹிக்கவும் தங்களில் ஒருவரான அக்ராஸ நாதிபதி ஸ்ரீமாந். எம். ரங்காசார்யரே அர்ஹர் என்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். விசாரம் செய்வதும், வாக்யார்த்தம் செய்கிற ரீதியை அநுஸரிக்காமல், இக்காலத்து உபந்யாஸ ரீதியையே அநுஸரிக்க வேண்டு மென்றும் அவர்களுடைய வ்யவஸ்தை. அநேக பண்டிதர்களுக்கு இந்த வ்யவஸ்தை சிறிதும் ந்யாய்ய மாகத் தோன்றவில்லை. அவர்கள் ஒன்று சேர்ந்து, கக்ஷிக்கு ஒருவராக இரண்டு பண்டிதர்கள் மாத்திரம் வாதம் செய்கிறது என்றும், மற்றைப்படி யாருக்காவது வேறே கோடிகள் தோன்றினால் அவைகளைத் தங்கள் கக்ஷியில் வாதம்செய்யும் பண்டிதர் வழியாகவே சொல்லிக் கொள்ளுகிறது என்றும், வாதம் முழுமையும் ப்ராசீந வாக்யார்த்தம் சொல்லும் ரீதியையே அநுஸரித்திருக்கவேண்டு மென்றும், விசாரத்தின் குணதோஷங்களின் நிர்ணயத்தைத் தங்களுக்குள் ஸர்வ ஸம்மதர்களாக மூன்று மதஸ்தர்களிடமிருந்து மதத்துக்கு ஒருவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ள மத்யஸ்தர்களே செய்கிறது என்றும், மற்றைப்படி ஸதஸ்ஸின் ஸாதாரணமான யாஜமாந்யத்தை ஸ்ரீ. எம். ரங்காசார்யர் வஹிப்பதில் தங்களுக்கு ஆக்ஷேபமில்லை என்றும் தீர்மானம் செய்து, இந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்க வேணு மென்று ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களைக் கேட்டுக்கொண்டார்கள். இதன் ஸாதுத்வத்தைப் பராமர்ஸித்து ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்கள் இதை அங்கீகரித்ததன் பேரில் முதல் நாள் விசாரம் முழுமையும் இந்த ரீதியாகவே பரிஷ்கார மாக நடந்தது.

வாதத்திற்காகக் குறிப்பிட்ட விஷயங்களில் முக்கியமானவை இரண்டு: ஸமுத்ரயாநம், ருதுமதீ விவாஹம் இவைகளின் அநுஷ்டாநம் ஶாஸ்த்ர ஸம்மதமாகுமா? என்பதுதான். இவைகளில் முதலதான ஸமுத்ரயாந விஷயத்தைப் பற்றி முதல்நாள் விசாரம் ஆரம்பித்தது. 'ஸமுத்ர யாநம் தோஷமாக இருந்தாலும் ப்ராயஶ்சித்தத்தால் அந்தத் தோஷம் பரிஹரிக்கப்படலா மென்பதுதான் ஶாஸ்த்ரத்தின் அபிப்ராயம்' என்று வடக்கிலி

ருந்துவந்துள்ள ஓர் வித்வாந் உபந்யாஸம் செய்ய, திருப்பதியிலிருந்து வந்திருந்த கபிஸ்தலம் ஸ்ரீ. தேஶிகாசாரியர், 'அது அப்ராயஶ்சித்தியமே' என்று ஶாஸ்த்ரம் சொல்வதாக ஸித்தாந்தம் செய்தார். இவர் உபந்யாஸம் செய்த மாதிரியும், உசிதமான விஷயங்களை எடுத்து ஸுகமாக எல்லாருக்கும் போதமாகும்படி சொன்ன ரீதியும், ஶாஸ்த்ரார்த்தம் இதுவே என்பதற்கு அவர் எடுத்துரைத்த ஸத்யுக்திகளின் பெருமையும், அங்கு இருந்தவர்களின் மநஸ்ஸைப் பூர்ணமாக அபஹரித்து விட்டன. வாதம் ஸாவஶேஷமாக இருந்த படியால், மறுநாள் காலையில் மறுபடியும் இதைத் தொடர்கிறது என்கிற எண்ணத்துடன் அன்றைக்கு ஸமாஜம் கலைந்தது.

மறுநாள் காலையில் ஸதஸ் சேர்ந்த வுடனே அக்ராஸநாதிபதியான ஸ்ரீ. எம். ரங்காசார்யர், இந்த மாதிரியாக வாதம் செய்வது முன்னமே நம்மால் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கு விருத்தமானதாதலால் அநுசிதமென்றும், பழையவிதிகளை உறுதிசெய்து தம்முடைய மத்யஸ்தத் தன்மையையே அங்கீகரித்துக்கொண்டு நவீநமான பாஶ்சாத்ய க்ரமப்படியே உபந்யாஸாதிகள் நடக்க வேண்டுமென்றும், முதலில் குறிப்பிடப்பட்ட முப்பது வித்வாங்கள்மாத்திரம் ஸதஸ்ஸில் பேச அர்ஹர்களென்றும் சொல்லி, முதல் நாள் நடந்த க்ரமத்தை நிஷேதித்து விட்டார். இதற்குக் காரணம் இன்னது என்று நிர்ணயம் செய்யக்கூடவில்லை. ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்கள் சொல்வது போல 'வாதம் அளவில் அகப்படாமற் போய்க் குறிப்பிட்ட காலத்துக்குள் விஷய நிர்ணயம் ஏற்படாமலிருந்து விடுமோ?' என்கிற ஶங்கையாகவே இருக்கலாம்: இல்லாவிட்டால், பண்டிதர்கள் சொல்வது போல 'ஸ்ரீ. தேஶிகாசாரியர் ப்ரப்ருதி இம்மாதிரியாகவே வாதம் செய்து கொண்டுபோனால் ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களுடைய இஷ்டபூர்த்தி கிடைக்காமற் போய்விடும்' என்கிற பீதியாக இருந்தாலும் இருக்கலாம். எந்தக் காரணத்தாலானாலும் உபக்ரமித்த ரீதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது. நடுவிலே இந்த மாதிரியான மாறுதல் செய்வதன் அநௌசித்யத்தைப்பற்றிப் பண்டிதர்கள் ஆக்ஷேபித்தார்கள். ஸதஸ்ஸில் கொ

ஞ்சம் அவ்யவஸ்தை தலையெடுக்க அந்த அவ்யவஸ்தையை வ்யாஜ மாகக் கொண்டு அக்ராஸநாதிபதி ஸதஸ்ஸைக் கலைத்துவிட்டார். மிகுந்த ஶ்ரமத்துடனும் தநவ்யயத்துடனும் ஏற்படுத்தப் பட்ட இந்த ஸமாஜம் ஒரு விதமான நிஷ்பத்தியையும் அடையாமல் நிஷ்ப்ரயோஜநமாகச் சிதறிவிட்டது. உடனே நமது பண்டிதர்களும் ஒன்று சேர்ந்து ஒரு கார்யத்தை ஸாதிக்க ஶக்தர்களாவரோ?' என்கிற வதந்தியும் பலவிடங்களில் பரவி விட்டது. அவ்வாறு ஸதஸ் கலைந்தபிறகு சில பண்டிதர்கள் தங்கி நின்றதாகவும், அவர்களை வைத்துக்கொண்டு அக்ராஸநாதிபதியும் மற்ற ஸதஸ் ப்ரவர்த்தகர்களும் புதிதான மற்றொரு பரிஷத்தை ஏற்படுத்தி முற்கூறிய விஷய சர்ச்சையைப் பின்பு இரண்டு மூன்று நாள் நடத்தினதாகவும் இப்பொழுது தெரிய வருகின்றது. ஶாஸ்த்ரார்த்தத்தைப் பற்றி இந்தப் பண்டிதர்கள் எவ்விதமான நிர்ணயத்துக்கு வந்தார்களென்று இன்னும் ஏற்படவில்லை.

யதார்த்தமாக இவ்வளவு பரிஶ்ரமமும் வீணாகப் போனதற்குப் பண்டிதர்களின் அக்ரமமே காரணமா? என்பதை நிரூபித்துப்பார்த்தால் அணுவளவேனும் பண்டிதர்களின்மீது தோஷம் சொல்ல ஹேதுவில்லை என்பது ஸ்புடமாக ஏற்படும். ஸதஸ்ஸைக் கலைத்துவிட்டுப் பரிஶ்ரமம் முழுவதையும் வீணாக்கிவிடவேண்டுமென்பது அவர்கள் கருத்தல்லவே. எல்லாரும் ஐகமத்யத்துடன் மூன்று பண்டிதர்களை மத்யஸ்தர்களாக ஒப்புக் கொண்டதும், வாதத்தில் யாதொரு கலக்கமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு எல்லாரும் ஒன்றுசேர்ந்து கக்ஷிக்கு ஒருவராக இரண்டு பெயரை வாதம் செய்யத் தேர்ந்து கொண்டதும், தங்களால் அங்கீகரிக்கப்பட்ட வ்யவஸ்தைக்குக் கட்டுப்பட்டு முதல்நாள் முழுவதும் எல்லாரும் வியப்படையும்படி அவர்கள் வாதம்செய்ததும், இவையெல்லாம் பண்டிதர்களின் அக்ரமத்தின் சிஹ்நங்களாகுமோ? பாஷாந்தரம் அப்யஸித்தவர் உணர்ந்திருக்கும் முறைமையைவிட மிகச்சிறந்த முறைமையை இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பது இதனால் விளங்கவில்லையோ? தவிரவும், ஶாஸ்த்ரார்த்தத்தை அறியவேண்டுமென்கிற ஊக்கத்துடன் இவர்கள் ப்ரவ்ருத்தித்தவர்

களை தவிர, அபிப்ரேதமான ஒரு இஷ்டத்தை மநஸ்ஸில் வைத்துக்கொண்டு ப்ரவ்ருத்தித்தவர்களல்லர்; ஆகையால், ஸதஸ்ஸைக் கலைத்ததற்கு இந்தவித்வான்கள் காரணமென்று சொல்லக் கொஞ்சமேனும் ஹேதுவில்லை.

ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களின் விஷயத்திலோ இப்படியன்று. நிஷ்பக்ஷபாதமாக ஶாஸ்த்ரார்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேணுமென்கிற ஒரே எண்ணத்துடன் இவர்கள் ப்ரவ்ருத்தித்திருந்தால், ஸதஸ்ஸுக்கு இந்த மாதிரியான முடிவு வந்திருக்காது. இவர்கள் நடந்திருக்கும் ரீதியைப் பார்க்கும்பொழுது ஒருகால் பண்டிதர் சொல்லுகிறபடி தங்களுடைய நோக்கத்துக்கு எவ்விதமான ஸாதகமும் இந்த ஸதஸ்ஸால் கிடைக்காது என்று தெரிந்துகொண்டவுடன் இவர்கள் ஸதஸ்ஸைக் கலைத்துவிடுவதே நலமென்று எண்ணியிருந்தாலும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. பண்டிதர்கள்மீது தோஷத்தை ஆரோபிப்பது பெருத்த அக்ரமமே.

யாரோ ஒரு பண்டிதர் இரண்டாவது திநம் காலையில் அஸப்பமான சில வார்த்தைகளைச் சொன்னதாகக் கேள்விப்படுகிறோம்; அது மிகவும் ஶோசிக்கவேண்டிய விஷயமே. ஸதஸ்ஸின் ப்ரவர்த்தகர்களுடைய நடவடிக்கையே இதற்குக் காரணமாக இருந்தாலும், அவ்வளவு ஆக்ரோஶம் ஜநிக்கும்படி பண்டிதர்களை அவர்கள் தூஷணமாகப் பேசியிருந்தாலும், இவர்கள் அஸப்பமான வார்த்தையை ப்ரயோகம் செய்தது பிசகுதான். ஆனல், அது அந்த வ்யக்தியின் தோஷமாகுமே யொழிய, பண்டித ஜாதிக்கு ஒரு குறையையும் ஏற்படுத்தமாட்டாது. பண்டிதரல்லாமல் பாஷாந்தரம் படித்த வித்வாங்களிலும் இம்மாதிரியான கோபநர்களை நூற்றுக்கணக்காகப் பார்க்கிறோம்.

ஆனல், பண்டிதர்கள் ஒன்று செய்திருக்கலாம். அது செய்யாமல் தவறினது தவறுதலென்றே நமக்குத் தோன்றுகின்றது. அக்ராஸநாதிபதி ஸபையைக் கலைத்தவுடன், இந்தப் பண்டிதர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஒரு அக்ராஸநாதிபதி

யையும், ஸபை நடத்துவதற்கு உரிய சில விதிகளையும் அப்பொழுதே ஏற்படுத்திக்கொண்டு, முதல்நாள் செய்த வாக்யார்த்த க்ரமத்தையே அநுஸரித்து, குறிப்பிட்ட விஷயங்கள் எல்லாவற்றிலும் ஶாஸ்த்ரார்த்த நிர்ணயத்தைச் செய்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஸதஸ் ப்ரவர்த்தகர்களின் அவலம்பமில்லாமல் இரண்டு மூன்று நாள் அவ்விடத்தில் இவர்கள் தங்கிநிற்பதும் துஸ்ஸாத்யமன்று. இவ்வளவு வித்வான்கள் ஒன்று சேர்ந்ததன் ப்ரயோஜநமும் ஏற்பட்டுவிடும். அது தவறிப்போனது தவறுதல்தான். என்பது நம்முடைய எண்ணம்.

---

**ஸ்ரீ அஹோபில மடம்.**

சென்ற ஸஞ்சிகையில், ஸ்ரீ அழகியசிங்கர் மிகவும் திருமேனி பாங்கில்லாமல் எழுந்தருளியிருந்தா ரென்றும், ஒருகால் அந்யதாவாக நேர்ந்து விட்டால் அவருக்குப் பிறகு ஆஸ்தாநத்திற்கு ஸ்ரீ ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணுவதில் எவ்விதத்தவறுதலு மில்லாமல் ந்யாயம் நடைபெறவேண்டுமே என்றும் விசாரப்பட்டு எழுதியிருந்தோம். பகவத் ஸங்கல்பத்தால் அவ்விதமான விசாரத்திற்கு ஹேதுவில்லாமலே ஸ்ரீ அழகிய சிங்கர் ஆநுகூல்யத்தைத் திரும்பவும் அடைந்து யதாபூர்வம் த்ருடமாக எழுந்தருளியிருக்கிறார். எல்லாருக்கும் இந்த ஸமாசாரம் பெருத்த ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது. திருமேனியின் ஆநுகூல்யத்தை ஸங்கல்பித்ததுபோல, ஸ்ரீ பகவாந், ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளத்திலும் வைஶத்யத்தைப் பூர்ணமாக ஏற்படுத்தி, ஸ்ரீ ஸந்நிதி கார்யங்களை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் உகக்கும்படியே நடத்திவரவேண்டிய ஶக்தியையும் மநஸ்ஸையும் ஸ்ரீ அழகிய சிங்கருக்குக் கொடுத்து அநுக்ரஹிக்க வேணுமென்று ஸர்வகாலமும் ப்ரார்த்தித்து நிற்கிறோம்.

---

# The Vedanta Dipika.

## BUSINESS NOTICE.

### 1. Subscription.

Subscribers who have not paid their subscriptions yet for the current year are requested to make the payment at their earliest convenience.

### 2. Advertisements.

Intending advertisers are requested to apply to the Manager, 11, Kesavaperumal Sannidhi Street, Mylapore, Madras, S. The rates are as follow.

| | | | |
|---|---|---|---|
| One insertion ... ... ... ... | Rs. | 5 | a page. |
| Two insertions ... ... ... ... | ,, | $7\frac{1}{2}$ | ,, |
| Three ,, ... ... ... ... | ,, | 10 | ,, |
| Six ,, ... ... ... ... | ,, | 15 | ,, |
| Twelve ,, ... ... ... ... | ,, | 25 | ,, |

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமவர்கள் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கேசவப் பெருமாள் ஸந்நிதிவீதி 11 - நெ. க்ருஹத்தில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு.

### இதில் அடங்கியவை.

ராமாநுஜபாஷ்யம், தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

### இதுவரையிலும் மொழிபெயர்க்கப்படாதவை.

1, 2, 3, 4, 5 ஸஞ்சிகைகள் வெளியாகியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை | 0 | 6 | 0 |
| தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட | 0 | 8 | 0 |
| வருஷ சந்தா (12 - ஸஞ்சிகை) | 4 | 0 | 0 |
| தபால்கூலி உள்பட | 4 | 12 | 0 |

சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ,

34 - அக்ரஹாரம்வீதி சிந்தாத்ரிபேட்டை, சென்னை.

---

ஸ்ரீ.

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

(ஸாதாரண ஹூ மாசிஸ்ரீ ஏற்படுத்தப்பட்டது.)

பத்ராதிபர்:—எஸ். வாஸுதேவாசாரியர் பி.ஏ, எல்.டி.

☞ கட்டணம் கட்டுதலும், இன்னும் பத்ரிகை விஷயமாக எழுதுதலும் எல்லாம் மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியி லிருக்கும் பத்ரிகை மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.

Printed for the General Secretary, A. M. S. Sabha,
by W. I [illegible] Chetty & Co., K. R. Press, Madras.